உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம :

ஓம் குஹப்ரஹ்மணே நம :

## பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

## அருளிய

# பழநிமலைத் திருவிளையாடல்

## கந்தசஷ்டி வெளியீடு

*வெளியிடுவோர் :*

**பாம்பனடியார்கள், சென்னை - 106**

**2018**

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:

## பதிப்புரை

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய '**ஸ்ரீமத் குமாரசுவாமிய**' மெனும் ஆறாவது மண்டலத்துள் திருவிளையாடற்காண்டத்தின் கடைசியாக விளங்குவது **பழநிமலைத் திருவிளையாடல்** என்னும் பகுதி.

செவ்வேட்பரமன், பூவுலகில் ஆறுபடைவீடுகளென தனக்கிருப்பிடமாகக் கொண்டுள்ளதால் சிறப்புடைய மலைகளினும் உம்பரிலுள்ள கந்தகிரியினின்றும் கொண்டு வரப்பெற்று **மோக்ஷ தரிசன ஸ்தலமாக** விளங்குவதால் இம்மலைகளின் மாண்பு அளப்பரிய சிறப்பாகும்.

80 பாடல்களைக் கொண்ட இப்பகுதியின் சிறப்பினை உணர்ந்து பல வருடங்கட்கு முன்பு சில அன்பர்கள் உரையுடனும் தனியாகவும் வெளியிட்டனர். இதனை ஓதி பலர் நலமும் பெற்றனர். அருமை கருதி வெளியிடப்படுமிதனை அன்பர்கள் ஓதி நலம்பெற வேண்டுகிறோம்.

**பாம்பனடியார்கள்,**
சென்னை

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மாநந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

- ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளருளிய
**கந்தரலங்காரம்**

உ

ஓம் குமரகுருதாச குருப்யோ நம:
ஓம் குமார குருப்யோ நம:

*திருச்சிற்றம்பலம்*

## இறைவணக்கம்

**க**ங்கையென் சுதனே யென்னக் கார்த்திகை மதலா யென்னச்
சங்கரி மகனே யென்னச் சங்கரன் குருவே யென்ன
மங்கைய ரிருவோ ருந்து மணத்திருத் தலைவா வென்னப்
புங்கவர் பரமா வென்னப் பொலிசிவ னடிபோற் றுவலே.

## ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் துதி

**அ**ருவமொரு நான்காகி யுருவமொரு
நான்காகி யறையி ரண்டும்
மருவியுள வுருவருவ மொன் றாகி
முத்திறமும் வழுத்த வொண்ணாப்
பெருவெளிக்கு மப்பாலா யுள்ளபொரு
ளீதெனவே பெரிதுஞ் சேயோன்
ஒருவனையே புகழ்ந்தவரு ளருணகிரி
சேவடிப்போ துளத்துள் வைப்பாம்.

## திருப்புகழ்

**வ**சன மிக ஏற்றி மறவாதே
மனது துயர் ஆற்றில் உழலாதே
இசை பயில் ஷடாக்ஷ ரம்அதாலே
இகபர செள பாக்யம் அருள்வாயே
பசுபதி சிவாக்யம் உணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே.

****

உ

# குமாரஸ்தவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஓம் | ஷண்முக | பதயே நமோ நம : |
| 2. | ஓம் | ஷண்மத | பதயே நமோ நம : |
| 3. | ஓம் | ஷட்க்ரீவ | பதயே நமோ நம : |
| 4. | ஓம் | ஷட்க்ரீட | பதயே நமோ நம : |
| 5. | ஓம் | ஷட்கோண | பதயே நமோ நம : |
| 6. | ஓம் | ஷட்கோச | பதயே நமோ நம : |
| 7. | ஓம் | நவநிதி | பதயே நமோ நம : |
| 8. | ஓம் | சுபநிதி | பதயே நமோ நம : |
| 9. | ஓம் | நரபதி | பதயே நமோ நம : |
| 10. | ஓம் | ஸூரபதி | பதயே நமோ நம : |
| 11. | ஓம் | நடச்சிவ | பதயே நமோ நம : |
| 12. | ஓம் | ஷடக்ஷர | பதயே நமோ நம : |
| 13. | ஓம் | கவிராஜ | பதயே நமோ நம : |
| 14. | ஓம் | தபராஜ | பதயே நமோ நம : |
| 15. | ஓம் | இஹபர | பதயே நமோ நம : |
| 16. | ஓம் | புகழ்முநி | பதயே நமோ நம : |
| 17. | ஓம் | ஜயஜய | பதயே நமோ நம : |
| 18. | ஓம் | நயநய | பதயே நமோ நம : |
| 19. | ஓம் | மஞ்சுள | பதயே நமோ நம : |
| 20. | ஓம் | குஞ்சரீ | பதயே நமோ நம : |
| 21. | ஓம் | வல்லீ | பதயே நமோ நம : |

| | | | |
|---|---|---|---|
| 22. | ஓம் | மல்ல | பதயே நமோ நம : |
| 23. | ஓம் | அஸ்த்ர | பதயே நமோ நம : |
| 24. | ஓம் | சஸ்த்ர | பதயே நமோ நம : |
| 25. | ஓம் | ஷஷ்ட | பதயே நமோ நம : |
| 26. | ஓம் | இஷ்டி | பதயே நமோ நம : |
| 27. | ஓம் | அபேத | பதயே நமோ நம : |
| 28. | ஓம் | ஸுபோத | பதயே நமோ நம : |
| 29. | ஓம் | (வ்) வியூஹ | பதயே நமோ நம : |
| 30. | ஓம் | மயூர | பதயே நமோ நம : |
| 31. | ஓம் | பூத | பதயே நமோ நம : |
| 32. | ஓம் | வேத | பதயே நமோ நம : |
| 33. | ஓம் | புராண | பதயே நமோ நம : |
| 34. | ஓம் | (ப்)பிராண | பதயே நமோ நம : |
| 35. | ஓம் | பக்த | பதயே நமோ நம : |
| 36. | ஓம் | முக்த | பதயே நமோ நம : |
| 37. | ஓம் | அகார | பதயே நமோ நம : |
| 38. | ஓம் | உகார | பதயே நமோ நம : |
| 39. | ஓம் | மகார | பதயே நமோ நம : |
| 40. | ஓம் | விகாச | பதயே நமோ நம : |
| 41. | ஓம் | ஆதி | பதயே நமோ நம : |
| 42. | ஓம் | பூதி | பதயே நமோ நம : |
| 43. | ஓம் | அமார | பதயே நமோ நம : |
| 44. | ஓம் | குமார | பதயே நமோ நம |

உ

திருச்சிற்றம்பலம்

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (முதற்பத்து)

***கலிநிலைத்துறை.***

அடியொன்றற்குப் பதினான்கக்கரம்.

***இரண்டுசீர்வண்ணம்.***

**மூ**ப்பி லாவிள வேனிலின் முந்துவ சந்தனைத்
தூப்ப டீரம தைத்தரு தென்மலைத் தொன்முனி
யாப்பு லாவுத மிழ்த்தல மேம்பட யாணரார்
பூப்பல் கோடொளிர் கந்தகி ரித்தடம் புக்கனன். 1

**பு**க்க மாமுனி தன்சிவன் பொன்னடி முன்னியே
அக்க னாசல மார்சிவ கோடவிர் சத்திகோ
டிக்க லாமுடி யென்றுகை நீட்டியி ழுத்தெடுத்
தெக்க லாமுமில் பூர்ச்சவ னத்தில்வைத் தேகினான். 2

**வா**ல லங்குதென் மால்வரை நின்றுவ யங்குகுற்
றாலம் வந்தவம் மாமுனி தன்பத மன்பொடு
சால வுந்துதி பண்ணியி றைஞ்சொரு தானவன்
கோல நன்கும தித்துன தூர்குயில் கென்றனன். 3

**எ**ன்ற லுஞ்சிவ பத்தியின் மல்கியி லங்கவன்
தென்ற றங்கும லைப்பெரி யாயொரு செக்கர்வேள்
மன்ற லந்திரு மேனிசு மக்கும யூரமாச்
சென்ற வன்புர முன்பின ரிவ்விடர் சேர்ந்துளேன். 4

**அ**ப்பு ரத்துறை வார்க்குவில் வித்தைப யிற்றடல்
எப்பு லத்தரு மெச்சுகு ருத்துவ மெய்தினேன்
துப்பு டைக்குக வேள்சமர் சூழ்தலு மப்புரம்
நப்ப லத்தையு றாதென விவ்வன நண்ணினேன். 5

**எ**ன்ற னாமமி டும்பனெ னப்புகல் வார்நறு
மன்ற லான்மனை யாட்டிம ருங்கினி னிற்குநள்
அன்றில் போலெனை யேபிரி யாதவ ருங்குணி
நன்ற றாதவு ளத்தின ணாமமி டும்பியாம். 6

**ஆ**த லாலெனை நோக்குதி யெப்பணி யாயினும்
ஓதி னாடுவ லேயென வோதின னோகைசால்
நீதி மாமுனி பூர்ச்சவ னத்திடை நேற்றுநான்
கோதி லாதுற வைத்தவி ரண்டுகு வட்டையும். 7

**வ**ன்மை கூரென்வ ரைத்தடம் வைத்திடு வாயெனின்
நன்மை யாவும்வி ளைந்திடு மென்றுந வின்றுமா
தொன்மை யாமனு வும்வழி பாடது வுந்துகள்
இன்மை யேய்வழி யுஞ்சொலி யேயவற் போக்கினான். 8

**போ**மி டும்பனு டன்செலி டும்பிபொ ருந்தமே
தேம ரும்புப டீரமு நல்லகி லுந்திரள்
வாம வெண்டர ளத்தெயி றுங்கொடு வார்தல்போல்
ஈமு கந்தப ழம்பல வாரியி வர்ந்தனள். 9

**ஏ**கு மேல்வைக யந்திக ழோர்பொழி லெய்தலும்
பாகு நேர்மொழி தீம்பழ முண்கெனப் பன்னினாள்
சேகு சேர்புய னுந்தினல் செய்தன னன்னள்பின்
சோக மேகநு கர்ந்தனள் சொற்புத னற்புளீர். 10

இளவேனிற் காலத்தில் முற்பட்டுவருந் தென்றல் காற்றையுஞ் செஞ் சந்தனத் தையும் ஈயும் பொதிகை மலையில் வாழும் புராதனராகிய அகத்திய மாமுனிவர், நல்லொழுக்கக் கட்டுப்பாடுகள் நிகழ் தமிழ்நாடு சிறப்படையும் பொருட்டு நன்மையுடைய அழகிய பல கொடுமுடிகளோடு விளங்கும் உம்பரிலுள்ள கந்தகிரிச் சாரலை யடைந்தனர். *(1)*

அடைந்த அம் மாமுனிவர், தமது அறுமுகச் சிவனாருடைய அழகிய திருவடி களைத் தியானித்து அந்தப் பெரிய மலையிற் பொருந்திய விளக்கமுடைச் சிவகோடுஞ் சத்திகோடும் இக்கலா முடிகளே ஆமென்று தம்முடைய கைகளை நீட்டி அவற்றை யிழுத்தெடுத்து எவ்வகைக் கலகமுமில்லாத பூர்ச்சவனத்தில் வைத்துவிட்டுத் தமதிருப்பிடத்துக்குச் சென்றார். *(2)*

தூய்மை பொருந்திய பொதிகை மால்வரையினின்றும் போந்து விளக்கமுடைத் திருக்குற்றாலத்திற்கு வந்த அவ்வகத்திய மா முனிவர், தம்முடைய பாதங்களை அன்போடு பெரிதுந் துதித்து வணங்கிய ஓரசுரனது தோற்றத்தை நன்கு மதித்து உனதிருப்பிடம் யாது? சொல்லுக என்று பணித்தனர். *(3)*

பணித்தவுடன் சிவபத்தியிற் சிறந்து விளங்கும் அவ்வசுரன், ‘‘தென்றல் காற் றானது தங்கியுள்ள மலையில் வாழும் மாமுனிவரே! ஒப்பற்ற செவ்வேளின் வாசனை பொருந்திய அழகிய திருமேனியைச் சுமக்கும் மயிலாய்ச் சென்றுவிட்ட சூரபது மனது வீரமா கேந்திரபுரம் எனது பழைய இருப்பிடம். பின்பு, இவ்வனத்தை யடைந்திருக்கிறேன். *(4)*

அவ்வீரமாகேந்திர நகரில் வாழ்வோர்க்கு வில்வித்தை கற்பிக்குந் திறமையில் எவ்விடத்துள்ளோரும் மெச்சும்படியான

ஆசிரியத்தன்மை யடைந்தேன். வலிமை பொருந்திய குமாரக்கடவுள் போர் தொடங்கின பின் அந்நகரம் நல்ல பலத்தை யடையாதென்று இக்காட்டைச் சேர்ந்தேன். *(5)*

அடியேன் பெயர் இடும்பன் என்று சொல்லுவார்கள். என் பக்கத்தில் நிற்பவள் நல்ல மணவினையாற் கிடைத்த மனைவி யாவள்; அன்றிற் பேடுபோ லென்னை விட் டெப்போதும் பிரியாத அருமையான நற்குணம் வாய்ந்தவள்: நன்மை மாறா துறையு நெஞ்சமுடையாள்: இவள் பெயர் இடும்பியென்பதாம். *(6)*

ஆதலால் அடியேனைக் காத்தருளுவீராக. எக்கட்டளையாயினு மிட்டால் அதனை நிறைவேற்றத் துணிவேன்.'' என்று கூறினன். மகிழ்ச்சியெய்திய நீதி தவறாத அகத்திய மா முனிவர், ''நேற்றைப்பொழுது நான் பூர்ச்சவனத்திற் பழுதுறாது பொருந்த வைத்துவிட்டு வந்த இரண்டு மலைச்சிகரங்களையும், *(7)*

பலம் பொருந்திய பொதிகைமலைப் பக்கத்திற் கொணர்ந்து வைத்திடுவையே யாயின் எல்லா நன்மைகளுமுண்டாகும்'' என்று செப்பி, பழமையான மகா மந்திரத் தையும், செய்யும் வழிபாட்டின் விவரத்தையும், சிக்கற்ற நேர் வழியையும் எடுத் துரைத்து இடும்பனைச் செல்லவிட்டனர். *(8)*

இப்படிச் செல்லும் இடும்பனோடு புறப்பட்ட இடும்பியானவள், தாமிரபருணியாறு வாசனை கமழுஞ் சந்தனக் கட்டைகளையும் நல்ல அகிற் கட்டைகளையுந் திரட்சி யுள்ள அழகிய வெண்முத்தஞ் சிந்தும் யானைத் தந்தங்களையும் வாரிக்கொண்டு ஓடுதல்போல, பழுத்த மணங்கருதி ஈக்கள் மொய்த்த பலவகைக் கனிகளையுஞ் சேகரித்துக்கொண்டு இடும்பாசுரனைத் தொடர்ந்து சென்றனள். *(9)*

*திருப்புகழ்க் கவிஞனார்மாட் டன்புடையீர்! இப்படிச் செல்லும் போது தடாக மமைந்த ஒரு பூஞ்சோலையை யடைந்தவுடன் பாகுபோன்ற சொல்லையுடைய இடும்பி, தான் கொடுவந்த இனிய பழங்களை யுண்ணும்படி வேண்டினாள். வயிரம் பொருந்திய புயங்களையுடைய இடும்பனுமுண்டனன். பின்னர் இடும்பி, கணவனுண்டு மீந்த கனிகளைத் தன் களைப்பு நீங்குமாறு தானுமுண்டனள். (10)*

## திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

### (இரண்டாம்பத்து)

***அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.***

அடியொன்றற்கிருபத்திரண்டக்கரம்.

*தனந்தனன தந்தன தனந்தனன தந்தன தனந்த தனன.*

**இ**டும்பனுமி டும்பியு மருங்கனிக
ளுண்டபி னிருங்க ளிறனான்
நெடுஞ்சடைபி றங்குத மிழின்சொலுறு
வன்சொலை நினைந்து மகிழ்வோ
டொடுங்கலினெ டும்பொழில் கடந்துவெளி
கண்டன னுலம்பு முகில்கள்
தொடுங்கிரிகள் கண்டன னவண்புகற
விர்ந்ததர் தொடர்ந்த னனரோ. 1

**தொ**டர்ந்தவன்வ லன்சிர மரிந்தவனு
டம்பில்வி ழிதுன்றி னமைநேர்
நடம்புரிசி கண்டிகள் சிகண்டநய னங்கண
னிகண்ட னன்மழை
தடங்கிரிவ ளைந்துறை வழங்கலின றுங்குணி
தரங்கெ ழுகுயில்
மடந்திகழ ருங்கிளி கடங்குபணை கண்டவை
வரைந்தொ ழுகினான். 2

**சி**றந்தபல சந்தக விமுன் பொலியி ழந்தக
விசிந்தை பயமே
உறுஞ்செவிநி மிர்ந்திட லுறழ்ந்துசெலு முந்தியை
யணைந்த சுனையுட்
பறம்புறழ்ப றம்பியர் கணொன்றுபொழு தம்பிறழ்
பருங்க யலெனக்
குறும்பொறையி ளந்தையர் தொடுஞ்செயல றிந்துந
கைகொண்டொ ழுகினான். 3

**அ**றம்புரிபெ ருந்தகை யரந்திருவு றழ்ந்துபெ
ருகுந்தி றமணை
நறுந்துறைசெ றிந்தது றையென்பவைகள்
கண்டன னவங்கொள் புளினம்
உறும்புடைகள் கண்டன னிலங்கிரவி
முன்பவி ழுமொண்க மலமா
சுறுஞ்சசியின் முன்பவி ழிருங்குமுத
மென்பவு முணர்ந்த னனவண். 4

**க**வின்சுடரு மிந்துமு கமண்டலவ ரம்பையர்
கள்கங்கு கடவா
திவர்ந்தொழுகு முந்திகு டையும் பொழுது
தன்பொலி வுகண்டி கனிலாம்
இவன்பெரிய கண்ட கருண்மிண்டனென
வஞ்சிவை யிலங்கு பெருவேற்
சிவன்பெயர்வி ளம்பலு முணர்ந்துகும ரன்றிரு
நினைந்தொ ழுகினான். 5

**ம**லர்ந்தமுக மந்திக ளுயர்ந்தபன சங்கத
லிமஞ்ச தவுமா
இலந்தைகட ருங்கனி களுண்டுகுளிர்
தண்டலை யிலங்கு பணைகள்
கலந்தகிளை தொங்கியு ழிதந்துகுதிகொண்டக
லல்கண்ட பினொரு
புலர்ந்ததரு வின்கவ டுமிங்கிலதெ னுங்குயில்
புகன்றொ ழுகினான். 6

**வ**யங்கெழும டங்கலு மடங்கலுநெ டும்புலி
யும்வன் புலியுமே
வியங்கெழு பெருங்கிடி யும்வெங்கிடியு
மெண்கொட டலெண்கும் விறலாம்
நயங்கெழுமெ றும்பியொ டெறும்பியு
முடன்றுச மர்நன்கு புரிபோ
தயங்கெழுத னங்கம வைகண்டுவில
குங்கொனு மறிந்தொ ழுகினான். 7

**வ**னந்திகழும் விண்டொடு நெடுந்தவள மஞ்சுப
டர்சம்பு வளைவு
தினந்திகழும் விண்டல மெனும்படிவி ளங்கலு
மதன்சி னையெலாம்
அனந்திகழ ருங்கனிகள் பங்குலமெனும்
படியலங்கலுமெயார்
மனந்திகழ ருந்தவ மடங்கல்கள்வ யங்கலு
மறிந்த னனரோ. 8

*தனத்தனன தத்தன தனத்தனன தத்தன தனத்த தனன.*

**க**றுப்புறுவரிக்கழு துமிக்கறைசெ ழிப்பொடு
கருக்கொள் செயலைத்
திறத்திரள்க ளைத்தமிழ்விருப்பமுனி சொற்றநன்மரச்
செறிவினை
மறத்தலின்ம னத்தொடு கணித்தவணி ருக்கிற
வரைக்கு வடுகாண்
உறுப்புமகிழ் வுற்றிட லுமப்புடையிருக்கம னமுற்ற
னனரோ. 9

**இ**ருக்குமவ னிக்கிரி களைத்தொடலி சைத்தலெ
ணலிற்றி னையுமோர்
விருப்புடனி ழைப்பவர் நினைத்ததைமு டிப்பரெ
னமெச்சி முனிதாள்
அருட்குணவு ளத்திடைய முத்தினனெ
னக்கினி யலக்க ணிலையென்
றொருக்கினன்ம னத்தினை வகுப்புகள்ப
டித்தவ னுவப்பை நினைவீர். 10

இடும்பனும் இடும்பியும் அரிய பழங்களைத் தின்ற பின்பு வலிய யானையை யொத்த இடும்பன், நீள்சடை விளங்கும் இனிய தமிழ்முனிவராகிய அகத்தியனார் கூறியருளியதை எண்ணி மகிழ்ச்சியோடு வளங்குன்றாத அப்பெரும் பூஞ்சோலையைக் கடந்து வெளியிடத்தைப் பார்த்தனன் . குமுறு மேகங்கள் தவழும் மலைகளையுங் கண்டனன். அவற்றினிடையே போதல் தவிர்த்து முனிவர் குறித்த வழியைத் தொடர்ந்து சென்றனன். *(1)*

இப்படித் தொடர்ந்து சென்றவன், இந்திரனுடம்பில் நெருங்கியுள்ள கண்களைப் போன்ற நடமாடு மயில்களினுடைய தோகைக்கண்களை நன்கு பார்த்தனன். மேகங்கள் பெரிய மலைகளைச் சூழ்ந்து தலைப்பெயலைச் செய்கின்றமையால் ஊமையர் கூட்டங்களை யொத்துக் கூவாதிருந்த நல்ல குயில்களும் இளமைதங்கிய அரிய கிளிகளுந் தங்கும் மரக் கொம்புகளையுங் கண்டு அவற்றைக் கடந்து சென்றனன். *(2)*

பொருட் பொலிவோடு பல சந்தங்களையும் பாடுஞ் சந்த கவிஞன் முன் அத்தகைய சந்தமில் சாதாரண கவிபாடுவோனது நெஞ்சம் பயங்கொள்ளும் பொழுது அவனோடுதல் போன்று விரைந்தோடு நதியினை யணைந்துள்ள சுனையிலே பறம்புகளை யொத்த பயோதர மாதர்களுடைய பார்வைகள் பொருந்துகையிற் றோன்றுந் தோற்றங்களை அழகு பிரகாசிக்கின்ற பருங்கெண்டை மீன்களென்று குறிஞ்சி நிலத்தூர்ச் சிறுவர்கள் பிடிக்க முயல்வதை இடும்பனறிந்து சிரித்துக் கொண்டு மேற்செல்லும்வழிச் சென்றனன். *(3)*

தருமஞ் செய்யும் உதார குணமுடையாரது அழகிய செல்வத்தைப் போன்று பெருகுந் தன்மையுடைய நல்ல

துறைகள் நெருங்கியுள்ள யாறுகளைப் பார்த்தனன்: புதுமையான மணற் குன்றுகள் பொருந்திய பக்கங்களைப் பார்த்தனன்: விளங்குஞ் சூரியன் முன்பு மலரும் நல்ல தாமரைகளையுங் களங்கங்கொண்ட சந்திரன் முன்பு மலரும் பெரிய குமுத மலர்களையும் நோக்கினன் அவ்விடத்தே அவ்விடும்பன். (4)

அழகு விளங்குகின்ற திங்களையொத்த முகமண்டலத் தினராகிய அரம்பை மாதர்கள், கரைகளை மீறாது தங்கிச்செல்லும் யாறுகளில் நீராடும்போது இடும்பன், தனது தேகப்பொலிவினை அம்மாதர்கள் கண்டு, ''வலிமைமிகுந்த இவன் பெரிய அசுரர்களுள் திண்ணியனாவன்'' என்று பயந்து கூர்மைமிளிரும் பெருவேலேந்திய சண்முக சிவன் திருநாமத்தை உச்சரித்தலையுங் கண்டு குமரவேளின் பெருமையை யுன்னி மேற் சென்றனன். (5)

மலர்ந்த முகத்தையுடைய மந்திகள் உயர்ந்த பலா, வாழை, வலிய அத்தி, மா, இலந்தை ஆகிய இம்மரங்கள் தரும்பழங்களைத் தின்று குளிர்ந்த பூஞ்சோலைகளில் விளங்கும் அரசமரங்களின் பின்னிய கிளைகளைப் பற்றித் தொங்கிச் சுழன்று குதித்து நீங்குதலையும் பார்த்த பின்பு, ''இவ்விடத்தில் ஒருலர்ந்த மரக்கிளைதானுங் காண்டற் கில்லை'' என்று வியந்து கூறி வழிநடந்தனன். (6)

வலிமை மிக்க சிங்கத்தோடு சிங்கமும் நீண்ட வேங்கையோடு திண்ணிய வேங்கையும் உடல் பருத்த பெருங்காட்டுப் பன்றியோடு கொடிய பிறிதொரு காட்டுப் பன்றியும் வலிமிக்க கரடியோடு கரடியும் வீரநயம் விஞ்சிய யானையோடு யானை யும் எதிர்த்து உக்கிரமாய்ச் சண்டை செய்யும்போது இரும்பினும் மேம்பட்ட தனதவயவங் களை

அவ்விலங்குகள் கண்டு சமர் நிறுத்தி விலகும் அச்சத்தையு முணர்ந்து மேற்சென்றனன். (7)

வனத்தின்கண் விளங்குகின்றனவும் வானத்தை யளாவி அழகு பெருகி யுள்ளனவுமாகிய நெடிய வெண்ணாவல் விருக்ஷங்களின் கவிப்பு, நாளும் விளங்கா நின்ற நீல நிற விண்ணெனும்படி பொலிவுறுதலையும், அங்ஙனங் கொம்பர் களிலெல்லாம் அன்ன நிறம்போல அவிருங் கனிகள் நக்ஷத்திரக் கூட்டமெனும்படி ஒளி செய்தலையும், மெய்ம்மை மனம் பிரகாசிக்கின்ற அரிய தபராஜ சிங்கங்கள் ஆங்கு வீற்றிருத்தலையும் அவ்விடும்பன் கண்டனன்.

*(அருந்தப அழகுடையார்க்குச் சிங்கத்தின் மேனோக்கம், சடை, மீசை, நக வளர்ச்சி முதலியனவும், வனவாசமு முண்மையின் அவர்களை அரிய தபராஜ சிங்கமென்பது சால்புடைத்தே ஆம்.)* (8)

கறுப்பு வரிகளையுடைய வண்டுகள் மிக்க ரீங்காரஞ் செய்யுஞ் செழிப்போடு அரும்பும் பருவமுடைய சிறந்த அசோகமரக் கூட்டங்களையுந் தமிழில் விருப்பமுள்ள அகத்திய முனிவர் குறிப்பிட்ட நல்ல பூர்ச்சமரக் கூட்டங்களையும் மறவாது மனத்தின் கட் கணக்கிட்டு அங்கே வைக்கப்பட்டுள்ள மலைச்சிகரங்களைக் கண்ணுற்ற தன்னுடைய கண்கள் களிகூர்ந்தவுடன் அவ்விடத்தி லிருக்க அவ்விடும்பன் மனம் பொருந்தினன். (9)

திருவகுப்புக்கள் பாடிய அருணகிரிநாதர் பெற்ற ஆனந்தத்தைப் பொருளாக எண்ணுவோர்காள்! மேற் சொல்லியாங்கு தங்கியிருக்கின்ற இடும்பன், ''இந்த மலைகளைத் தொடுதலிலும், புகழ்தலிலும், மதித்துச் சிந்தித்தலிலும் ஒரு சிற்றளவை யேனுஞ் செய்வோர் எண்ணிய எண்ணியாங்கு முடிப்போராவர்'' என்று மெச்சிப் பேசி

*அகத்திய மாமுனிவர் திருவடிகளைத் தனதன்பு வாய்ந்த உள்ளத்திற் பதிய வைத்தனன். ''இனியெனக்குத் துன்ப மில்லை'' என்று கூறி மனத்தை யொரு வழிப் படுத்தினன்.(10)*

## திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

### (மூன்றாம்பத்து)

***அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.***

**செ**வ்வடல் வரைத்தோண் மான்மைத் திரளென விம்மிப் பீலி
ஒவ்வடன் மீசை கொண்டை யுயர்வடி வாரி டும்பன்
இவ்வட திசைக்க ணிந்த விருசிலை மாட்சி தன்னைத்
துவ்வடல் வாய்ந்த வார்வத் துணைவியென் மொழிகே ளென்றே.
1

**அ**ரவிந்த மகளு மெச்சு மழகுடை யிடும்பி யாசில்
அரவிந்த வதன நோக்கி யறைகுவான் கேதா ரங்காண்
அரவிந்த மறச்சொ ரூப மாமிதன் பாங்கர் யாணர்
அரவிந்த தடஞ்சூ ழிக்கான் காண்விழி யதினு மேற்றாம். 2

**மெ**ய்த்தவ முடையா னிந்த மேன்றகை யுணர்ந்து தானே
வைத்தன னிஙன மிந்த மாமணிக் கிரியி ரண்டுங்
கைத்தொளி கான்மா மேரு கயிலையே முதலா மெட்டுள்
உய்த்தறை வரைகண் டாரு மிக்கிரி யுகக்க வேண்டும். 3

**ப**ன்மதி யொளியாய்த் தைவப் பல்வள முளவா யீண்டே
என்மதி யளியா ருன்ற னன்மதி யிழுக்கு நீராய்ப்
புன்மதி தனையு மீச்செல் புதுமதி யாய்ச்செய் வன்மை
நன்மதி யினர்க்கு மீயு நலத்தவா யுளவிந் நாகம். 4

**பெ**ருந்தனப் புதையல் கொண்டே பெருங்களி கூர்வார் போல
இருந்திருப் பொருளா மிந்த விறும்புகள் காணங் கண்ணும்
பொருந்திய மனமுந் தீண்டல் புரிந்தகை வாயு மின்பம்
அருந்தின பிறப்பும் வீவு மழிந்தன வசுர வல்லீ. 5

**எ**த்துய ரேய்ந்திட் டாலு மினிநமக் கதுவின் பீயும்
புத்தமு தாமே செவ்வேட் பொருளருண் முனிவன் சேவை
குத்திர வுலகில் வாளா போங்கொலோ காம வல்லிக்
கொத்துறு தருவ டுத்தார் நல்குர வடைவார் கொல்லோ. 6

**இ**ன்னண மிடும்பன் சொற்ற யாவையு மிடும்பி கேட்டுத்
தன்னுள மகிழ்ச்சி கொண்டா டானவ மீளி தென்பால்
மன்னரு ளுறுவன் சொற்ற மந்திர தவநோற் றானோர்
மின்னொரு பிரம தண்டும் விரிதிசைப் பாம்புத் தாம்பும். 7

**எ**திர்முகங் கிடக்கக் கண்டே யதிசயித் தெடுத்துத் தாம்பைக்
கதழ்வுறு குவடி ரண்டுங் கரகம்போல் வதியு மாறு
முதிருறி யாக்கித் தண்டின் மொய்ம்புற மாட்டி நாப்பண்
வதியொரு மடங்கன் மானக் குந்தினான் வலிமிக் குள்ளான். 8

**கு**ந்திய விரண்டு தாளு ளிடமுழந் தாளைக் குன்றா
அந்திகழ் தரையி லூன்றி யமர்வுறு தண்டைத் தோண்மேற்
சுந்தர மாக வேய்த்துத் துணைக்கரந் தொடைமே லாக்கி
மந்திர நுவன்று கொண்டே யெழுந்தனன் முகத்தேர் மல்க.
9

**பா**ம்புரி யனைய வாடை பருமணிக் குழைபொற் றாலி
காம்புறழ் தோண்முந் நீர்நேர் கண்ணழ குடையி டும்பி
தாம்பணை கிரியெ ழுங்கால் ஹரஹர வெனவே சாற்றித்
தோம்புண ராத கையாற் றொழுதன ளொலிய னாரீர். 10

செவ்வை வலி வாய்ந்த மலை போன்ற தோள்களுங் கரிய மேகக்கூட்டம் போலப் புஷ்டித்தும் விசிறிபோல வட்டமிட்டு முள்ள வட்டவார் மீசையும், கொண்டையும் உயரிய வடிவும் பொருந்திய இடும்பன், ''இவ்வுத்தர திசையில் இவ்விரண்டு மலைச் சிகரங்களின் மாண்பினைச் செவி யனுபவஞ்செய்யும் வன்மைவாய்ந்த என் அன்பு வாழ்க்கைத் துணைவீ! யான் கூறுதல் கேட்பாயாக'' என்று சொல்லி,- (1)

இலக்குமியும் புகழும் எழில் பெற்ற இடும்பியினுடைய மறுவற்ற தாமரை போன்ற முகத்தைப் பார்த்துப் பின்வருமாறு புகலத் தொடங்கினான். ''திருக்கேதாரத்தைத் தரிசிக்கப்பெற்ற கண்ணாகிய தாமரை தரும சொரூபமாகும். இக்கேதாரத்தின் பக்கத்தில் விளங்கும் பெரிய தாமரைக் கயங்கள் சூழ்ந்துள்ள இப்பூர்ச்சவனத்தைக் காணுங் கண், அத்தரும சொரூபக் கண்ணினும் மேம்பாடுடையதாகும். (2)

உண்மைத் தபோதனராகிய அகத்தியனார் இந்த மேம்பாட்டை யுணர்ந்தன்றோ பேரழகு படைத்த மலைச் சிகரங்களிரண்டையும் இவ்விடத்தில் இருத்திவைத்தார். பொன்னொளியைக் காலுகின்ற மகாமேருகிரியைத் தரிசித்தோருங் கயிலைமலை முதலிய அஷ்டகிரிகளுட் சேர்த்தெண்ணப்படும் வரைகளைத் தரிசித் தோரும் இவ்விரண்டு கிரிகளையுந் தரிசிக்க விரும்பவேண்டும்.

*(கயிலையோடு இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன கூட்டியுறழ அஷ்டகிரிகளாம். கயிலையை நீக்கிப் பாரியாத்திரம் மாலியவான் என்பவற்று ளொன்று கொள்ளின் எட்டு மலைகளெனவுமாம் : இவ்வாறு கோடல் இங்ஙனம் ஏலாது.)* (3)

கூறிப்போந்த இரண்டு கிரிகளும், பல சந்திரர்களுடைய

பிரகாசத்தையுடையனவாயும், தெய்வத்தன்மையுடைய நானாவித வளங்களையுடையனவாயும், இங்கே எனது மதியையும் அன்பார்ந்த உனது மதியையுங் கவருந்தன்மையவாயும், அற்ப வறிவையும் பெருநெறி குறிக்கும் புத்தறிவாகச் செய்யும் வலிமையை நன்மதி யுடையார்க்கு முதவு நலமுடையனவாயும் உள்ளன. (4)

அசுரப் பூங்கொடியே! பெரியதோர் புதையற் பொருளை யெடுத்துக்கொண்டு மிக்க களிப்பனுபவிப்பவர்களைப்போலச் சிறந்த செல்வமாயுள்ள இம்மலைகளைக் காண்கின்ற நங் கண்களும் அவற்றோடு பொருந்தியுள்ள நம் மனமும் அவற்றைப் பரிசித்த நங் கைகளும் (அவற்றைப் புகழ்) நம்முடைய நாவுங் களிப்பினைய னுபவித்தன. நமக்குப் பிறப்பும் இறப்பும் ஒழிந்தன. (5)

இனி எவ்வித துக்கம் நமக்கு வரினும், அத்துக்கம் நமக்கு இன்ப நல்கும் புத்தமுதமாகுமே. செவ்வேட்பரமனது அருள் பெற்ற அகத்திய மாமுனிவரை நாம் சேவித்தது மலைகளோடுங் கூடிய இவ்வுலகில் வீண்போமோ? காமவல்லி படர்ந்துள்ள கொத்துக்களோடு கூடிய கற்பக தருவை யடைந்தவர்கள் வறுமை வந்தடையப் பெறுவரோ?'' (பெறார் என்றபடி) (6)

இவ்வாறு இடும்பன் கூறியவற்றையெல்லாம் இடும்பி கேட்டு நெஞ்சங் களி கூர்ந்தாள். இடும்பன், தென்றிசையில் வதியும் அகத்தியனார் உபதேசித்த மந்திர சகிதமான தவத்தை யனுட்டித்தான். அழகு பிரகாசிக்கின்ற ஒரு பிரமதண்டமும் பரந்த திசைப் பாம்புகளாகிய தாம்புகளும், - (7)

தனக்கெதிரே கிடக்கக் கண்டு வியந்து அவற்றை யெடுத்துப் பெருமை பொருந்திய இரண்டு மலைகளுங் கரகங்கள் போலத் தங்கும்படித் தாம்புகளை வலிய உறிகளாக்கித் தண்டிற் பலம் பொருந்த மாட்டி அவைகட்கு

*நடுவே தங்குமொரு சிங்கத்தைப் போல வலிமிக்க இடும்பன் குந்தியிருந்தான். (8)*

*அப்படிக்குந்திய இரண்டு கால்களுள் இடமுழங்காலைக் குறையா அழகு விளங்குந் தரையின் மீதூன்றி, உறிகளினோடமைந்த தண்டைத் தன் தோளின்மீது எழில்பெறச் சேர்த்து, தன்னுடைய இரண்டு கைகளையுந் தொடையிலுந் தண்டிலும் பொருந்தச் செய்து மந்திரத்தைச் செபித்துக்கொண்டே தன் முகத்தெழில் விளங்க எழுந்து நின்றனன். (9)*

*அருணகிரி நாதர்பா லன்புடையீர்! பாம்பின் தோலைப் போன்ற ஆடையையும் பெரிய இரத்தினக் குழைகளையும் பொற்றாலியை யும் வேயனைய தோளையுங் கடல்போன்ற கண்ணழகையு முடைய இடும்பியானவள், தாம்புகளணைந்த மலைகள் தரையை விட்டெழும்போது ‘‘ஹர ஹர’’ என்று கோஷித்துக் குற்றஞ் செய்தறியாத் தன்னுடைய கைகளால் தொழுதனள். (10)*

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (நான்காம்பத்து)

## நடிப்பு.

***எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.***

எழுத்தளவுடையன.

**க**னமருவு தோட்சுமையெ னும்பேர்க்
  காவடியெ டுத்தேகு வாரெனந டக்கும்
மனவுறுதி கூடியவம் மீளி
  வன்னெடிய பட்டிகையி றுக்கியவ ரைக்கீழ்

நனவணவு தூக்குகளி ரண்டு
    நாலவெழி லார்கழல்பெ யர்த்திடலு ஞாலம்
பனிகொளவ திர்ந்ததது போது
    பாரமெளி தாயதுசெவ் வேள்செயலி னாலே. 1

**அ**ப்பொழுது பூதிதிமிர் மேனி
    யவிரவுண வேறுதன தாய்வுரனி லங்கு
துப்புடைய கண்டிகைக ளாட
    சுடர்கழல்க ளாடவுட லங்குழைக ளாட
ஒப்புடைய தோட்சுமையு மாட
    வுவகையுட னாடலின்மு யன்றனனஃ தோடு
செப்பரிய பாடலுந வின்றான்
    றிகழுமவ னாவினவ வாணியுமு லம்ப. 2

*தனனதன தனனதன தனனா*

*தனனதன தனனதன தனனதன தனனா.*

**ம**லையெதினு முயர்வுடைய பெருமாண்
    மருவியுயர் தலையணவி யிலகியவொர் மலைதான்
நிலையமிழ வயர்பெரிய முனிதா
    ணினையுமென திதயமலர் குளிர்மையுற மகிமா
இலகுமிரு குவடெனது சுமையா
    யிஙனமுற வனைதவமெ னெளியனென வுளயான்
மலயமுனி கடல்பருகி யருளோர்
    மகிமையையு முணருணர்வு மருவுவர்கொன் மடவோர். 3

**அ**திமதுர நறியகுயின் மொழியாள்
அனநடையள் வடுவனைய விழிகளவி ருமையாள்
சுதனெனவு மணிமிருக கரமா
துரைபுதல்வ னெனவுமயில் கடவிவரு பரமா
முதலையிதழ் மலர்மகடன் மருகா
முதுவிபுதர் தலைவனென விலையயில்கொண் முருகா
கதலிகளி னரசிதுகொ லெனமே
கலையொலிசெய் கொடிதுவளு மிரதமமர் கனமே. 4

**க**னகனக வணிகடிகழ் மயிலே
கலகலென வரவிவரு மழவடிவ வொயிலே
தினகரனை யிகழ்கழல்கொ ளமரா
திருமுடியு முரவணியும் வளையுமணி குமரா
மனவெளியி னடனமிடு குகனே
மதுரமொழி நவிலமல புனிதநதி மகனே
எனநுதிசெய் குறுமுனிவ னிறைவா
வினையினினை வறிவுகளென் மணியுதவு துறைவா. 5

**அ**மரர்சிறை விடுதலைசெய் விமலா
வடியவர்க டுயரமுறி னதனையடு மமலா
சமநிலையர் நினைவிலுறு பொருளே
தகுதகையர் தொழுவிமல மலயமுனி யருளே
கமலவய னறிவரிய சிவனே
கரிமுகவ னிளவலென மிளிர்பரம பவனே
குமரகுரு குமரகுரு வெனவே
குயில்பவர்க ளிதயமன வரதம்வளர் நினைவே. 6

**ம**ரணமுறு சனனமுமின் மழவா
வளவியபல் வரைகளிலும் வதியுமொரு கிழவா
இரவுபகல் புகழ்பொருள்க ளுறுபா
வினிதுநவில் பவர்சரண மடையவரு ணிருபா
சரவணமெ னளினிவரு நிதியே
சரவசர மெவையும்வதி பெருவடிவ பதியே
சுரர்குழுமு சபையினடு மணியே
சுகவறிஞர் பரசுகுறு முனிபரசு முனியே. 7

**பி**ரமமுனி யெவருநினை தனியே
பெரியவமு தெனுமினிமை யினிதுதவு கனியே
விரதர்விழை வனவுதவு தருவே
மிடனுதலில் விழியலரி திகழ்குமர குருவே
இரதனம தணையுமிடை யழகே
யினிமைதரு மழலைமொழி யினிதுகுயில் குழகே
மருமலர்கள் கமழவரு துரையே
வழுவின்மறை புகழ்பெரிய வரியகுண வரையே. 8

**அ**றவர்தொழ வவிருமறு முகனே
அனவரத மளவிலறி வொளியின்மிளிர் சுகனே
நறவுகம ழொலியல்புர ளகலா
நவவிறலர் கணமொடொலி யெழவருமொ ரிகலா
உறல்விலக லறுபெரிய செவியா
வுயர்கலைகண் முழுதுமுண ரியல்புகரை கவியா
மறல்வறுமை பிணிமுதிர்வி லுருவா
மறலிபய மறுசுகுர்தர் தொழுதடையு மொருவா. 9

**எ**னமொழியு முறைமையொடு நடமே
யினிதுபுரி யவனெடிய தொலைசெலலு மெதிர்காண்
வனநடுவில் வழிதெரித லிலனாய்
மருள்பொழுது குமரகுரு பரனவன தெதிரே
இனிதுசெலு முறைநினைவி லெணினா
னிருவினையு மலமுமற முருகனடி பரவோர்
முனியருண கிரிநெறியை விழைவீர்
முழுமுதல்வ னருளினினி நவில்வனவு நவில்வேன்.
10

*பாரமான தோட்சுமை யென்னும் பெயரையுடைய காவடியைச் சுமந்து செல்வோரைப்போல நடக்கும் மனவுறுதி கூடிய அவ்விடும்பன், தனது வலிய நீண்ட அரைப்பட்டிகை இறுக்கிக் கட்டப்பட்ட அரைக்குக் கீழே விளக்கம் பொருந்திய சுமைகளிரண்டுந் தொங்கும்படி அழகிய அடிகளைத் தூக்கிவைத்த அளவிலே பூமியானது உயிர்கள் நடுக்குறும்படி அதிர்ந்தது. அப்போது, செவ்வேட்பரம னருளினால் அப்பாரம், சுமத்தற் கெளியதாயிற்று. (1)*

*அச்சமயத்துத் திருநீற்றி னொளிவிளங்கு மேனிபடைத்த இடும்பன், தன தகன்ற மார்பில் விளங்கும் அழகிய உருத்திராக்ஷமாலைக ளாடவும் ஒளிவீசும் வீரக் கழல்கள் ஆடவும் பொன்னாலாகிய அழகிய காதணிகளாடவும் ஒப்பணைந்த தோட்சுமையுமாடவும் மகிழ்ச்சியோடு தானுமாடத் தலைப்பட்டான். இச்செய்கையோடு விளங்கு மவனது நாவின் கண்ணே தான் சொல்லியறியாத புதிய சொற்களும் ஒலிடவே பாடற்கரிய பாடல்களைப் பாடினான்.(2)*

எம்மலையினு முயர்வுடையதென்னும் பெருஞ்சிறப்பெய்தி உயரிய வானத்தை யளாவி விளங்கிய பருவதத்தைப் பூமியில மிழும்படி செய்த பெருமை வாய்ந்த அகத்திய மாமுனிவரடி களைச் சிந்திக்கும் எனது நெஞ்சங் களிகூரும்படிக்கு மகிமை திகழுமிவ்விரு குவடுகளும் யான் சுமக்கும் பாரங்களாக இப்போது பொருந்துதற்குச் சிறியேன் செய்த தவமென்னோ? அறிவிலிகளாயுள்ளோர் பொதிகை முனிவர் கடலைக் குடித்துத் தம்மை யடைந்தார்க் கருள்புரி மகத்துவத்தையும் அறியறிவைப் பெறுவர் கொல்லோ? (பெறார் என்றபடி) (3)

நறிய அதிமதுரக் குயின் மொழியினளும் அன்ன நடையுறழ்ந்த நடையினளு மாகிய மாவடுப்போன்ற விழிகள் விளங்குகின்ற உமாதேவி (அவன் என் ) சுதனென்று சொல்லிக் கொள்ளவும், அழகார்ந்த மானையேந்தியுள்ள கரத்தினையுடைய மகா சிரேஷ்டன் (அவன் என் ) புதல்வனென்று புகன்று கொள்ளவும் திசைகளில் மயிலைச் செலுத்திவரும் பரமா! செங்கிடைச்சியை யொத்த இதழ்களையுடைய இலக்குமி தேவியின் மருகா!! பண்டைத்தேவர்கள் தம் தலைவனென்று சொல்லிக் கொள்ளுமாறு இலை போன்ற வேற்படையேந்திய முருகா! துசங்களின் அரசிது வென்னும்படி தேர் முடியிலே கூவுகொடி அசையுமொரு தேரில் வதியும் பெருமிதமே! (4)

கனத்த பொன்னாபரணங்கள் விளங்கப்பெற்ற மயில் வாகனமானது கலகலென வர, அதன்மீதாரோகணிக்கும் இளமைப் பருவ ஒயிலே! ஞாயிற்றைப் பழிக்குங் காந்தி கொண்ட வீரக்கழல் புனைந்த அமரா! சிறந்த கிரீடத்தையும் மார்பணிகளையுந் தோள்வளைகளையு மணிந்த குமரா!

ஆன்மாக்களுடைய இருதயாகாசத்தின் கண்ணே நடனஞ் செய்யுங் குகனே! இனிய மொழியியம்பும் அழகிய பரிசுத்த கங்கையின் மகனே! என்று துதிக்கும் அகத்திய மாமுனிவர்க்கு இறைவனே! இணையில்லாத் தியான ஞானங்களென்னும் மணிகளைத் தரா நின்ற திருவருட் கடற்றுறையிலிருக்குந் துறைவனே! (5)

அமரர் சிறைமீட்டிய விமலா! அடியார்க ளலக்கணுறுங் காலத்து அதனை அகற்றியருளும் அமலா! சமநிலை வாய்ந்தவர் களுடைய கருத்திலுறையும் பொருளே! தக்க பெருமையுடையோர் பணியும் பரிசுத்தமுடைய அகத்திய மாமுனிவர்க்குக் கிடைத்துள்ள அருளே! பிரமதேவ னறியமாட்டாத சிவனே! விநாயகற் கிளவலென விளங்கும் பரம பவனே! ''குமரகுரு'' ''குமரகுரு'' என்று ஜெபிப்பவர்களுடைய இதய கமலங்களில் எஞ்ஞான்று மிருக்கும் நினைவே! (6)

சீவர்கட்குப் பொருந்து மிறப்பும் பிறப்புமில்லாத மழவா! வளம் பொருந்திய பல மலைகளிலும் வீற்றிருக்கும் ஒரு கிழவா! போற்றத்தக்க பொருள் செறிந்த பாக்களை இரவும் பகலும் இன்போடு பாடுவோர்கள் நின்றிருவடிகளை யடையும்படிக் கருள்செய்யும் நிருபா! சரவணமென்னும் பெயரிய தாமரை வாவியிற் றோன்றிய நிதியே! இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளுமாகிய எல்லாமும் ஒருங்கு தங்கியுள்ள பாரமேச்சுவர வடிவ பதியே! தேவர்கள் குழுமு சபையின் நடுநாயக மென்னும் மணியே! ஆனந்தானுபவ மெய்ஞ்ஞானிகள் போற்றும் அகத்திய மாமுனிவர் துதிக்கு மொரு முனியே! (7)

*பிரம ஞானிக ளெல்லோருந் தியானிக்குஞ் சமானமற்ற தனியே! அவர்களுக்கு இனிமையை நன்களிக்கும் அமுத சொரூபமென்னும் பெரிய கனியே! மெய்யன்பர் விரும்புவன வெல்லாந் தந்தருளுங் கற்பக தருவே! வலிய நெற்றிகளிற் கண்களாகிய மலர்கள் விளங்குங் குமரகுருவே! அரைஞாண் கட்டிய அரையினையுடைய அழகே! இன்பம் பயக்கும் மழலைச்சொல்லை இனிது கூறவுள்ள குழகே! வாசனையுள்ள மலர்கள் கமழ எழுந்தருளுந் துரையே! பிழையற்ற வேதங்கள் போற்றும் அரும் பெருங்குண வரையே! (8)*

*முனிவரர் பணிய விளங்கும் அறுமுகனே! எக்காலத்திலும் பேரறிவுப் பிரகாசத்தின் மிளிர்சுகனே! மணம் வீசு மாலைகள் புரளும் அகலா! நவவீர ரோடும் பூதகணர்களோடும் ஆரவாரத்தோ டெழுந்தருளும் இகலா! பொருந்துதல் விலகுத லென்னு மிருதன்மையு மற்று யாண்டு மிருந்து கேட்கும் பெரிய செவியா! சிறந்த கலைகண் முழுதுமுண ரியல்பினை யுரைக்குங் கவியா! பிணக்கு, வறுமை, நோய், மூப்பு என்னு மிவைகளில்லாத உருவா! யமபயம் அற்ற சுகுர்தர்கள் தொழுதடையும் ஒருவா!'' (9)*

என்று போற்றிசைக்கு முறைமையோடு களி நடம்புரியு மிடும்பன் நெடுந் தூரம் வழிநடந்த பின்பு எதிரிற் றோன்றிய காட்டின் நடுவில் வழியறியாதவனாகித் திகைக் கும்போது அவனெதிரே தான் இனிது செல்லு முறையைக் குமர குருபரன் திருவுள்ளத்துன்னினான். இருவினையும் மலமும் இரிந்தொழிய முருகனடி ஏத்திய அருணகிரிநாத முனீந்திரர் நெறியை விரும்பு நர்காள்! அம்முழுமுதற் கடவுளருளால் இனிக் கூறவேண்டிய வற்றையுங் கூறக்கடவேன். (10)

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (ஐந்தாம்பத்து)

### *கலிவிருத்தம்.*

அடியொன்றற்குப்பதினோரக்கரம்.

**கா**வ டித்திற லான்றனைக் காணுமா
றோவு றாக்கருங் கச்சையொ டேகுறுந்
தாவில் சட்டைத னைத்தொடை யேரரை
மேவ யாத்தன னேவடி வேற்பிரான். 1

**ஏ**ரு றுந்தலைச் சாலிகை யேணடி
ஆரு மந்தொடு தோலும ணிந்தவப்
பேரு ளோன்முது கிற்பிணை தூணிகை
சாரு மம்புச ராசனங் கொண்டனன். 2

**கொ**ண்ட கோலமு மெய்ந்நறுங் கோலமும்
அண்டர் தாமும ளப்பர்கொ லோவலி
மண்டி டும்பன்முன் வந்திவை யெங்குநீ
கொண்டு போகவிங் கெய்தினை கூறுதி. 3

**எ**ன்று கேட்டரு ளெம்பெரு மான்முனே
நின்று தென்மலை நேர்வழி கண்டிலேன்
மின்ற யங்குவில் வேலுடை நீரெவர்
என்று கேட்பதென் னாசையென் றானவன். 4

**வா**ம நீடுல காளிறை வன்மகன்
யாமன் வேட்டைநி மித்தமிங் குற்றனம்
நீம யங்கலிந் நீணெறி போய்க்கிடி
நாம நாகவ ழிச்செல்கென் றான்பிரான். 5

**இ**ன்ன ணஞ்சொற்ற வீசன்ம றைந்தபின்
நன்ன ராரவ்வ ராகந கத்தின்சார்
மன்னு மோர்தல மெய்தலும் வன்பிரான்
தன்னி ளைப்பிற்ற ளர்ந்துநின் றான்வலான். 6

**பா**ர மொட்டவொல் லாவவன் பைந்தரை
சார வைத்தனன் றோட்சுமை தன்னைமேற்
பாரி நல்குப ழம்பலந் துய்த்தனன்
ஏர றாவொரு தாபத மெய்தியே. 7

**கா**மர் மல்குமத் தாபதங் கட்டினோன்
வாம தேவமு னித்தலை வன்பினே
தூமல் கச்சுமை தூக்கமு யன்றனன்
வீம மேனிவி ளங்கவ்வி டும்பனே. 8

**செ**க்கர் வேள்செய லாலஃதெ ழுந்தில
தக்கல் லார்புய னீதென்கொ லென்றுதன்
தக்க தோள்வலி காட்டினன் றன்னெணம்
விக்கி னங்கொளல் கண்டுளம் வெம்பினான். 9

**செ**ம்பொன் யாவுமி ழுந்தவர் சிந்தைபோல்
வெம்பி யேசுற்றி நோக்குழி மெய்விளர்
அம்பி றங்குநற் கண்டன னாரொலி
நம்பி யின்பின ரேசிவ நாகமேல். 10

மலைக்காவடி சுமக்கும் வலியுடையிடும்பனைக் காணும் பொருட்டு வடிவேற் பெருமான் குறைவில்லாத கரியகச்சையோடு குற்றமற்ற சல்லடமென்னுங் குறுங்காற் சட்டையை அழகிய தொடை அரை யென்பனவற்றிற் பொருந்தக் கட்டினான். (1)

அழகிய தலைக்கவசத்தையும் வலிய பாதங்களிற் பொருந்தும் வனப்பு வாய்ந்த தொடுதோலையுந் தரித்த அவ்வேற்பெருமான், முதுகிற் பிணைக்கப்படும் அம்பறாத் தூணியையும் கைகளிற் பொருந்தும் அம்பையும் வில்லையும் பூண்டு கொண்டனன். (2)

இவ்வாறு கொண்ட கோலத்தையுந் திருமேனியின் நல்லழகையுந் தேவர்கள் தாமும் அளவிட வல்லராவரோ? பலமிக்க இடும்பன் முன்போந்து, ''இம்மலைகளை எங்குக் கொண்டுபோவதற்கு இவ்விட மடைந்தனை? சொல்லுவாயாக'' (3)

என்று வினவியருளிய எம்பெருமான் திருமுன்பில் இடும்பன் நின்றுகொண்டு, ''பொதியமலைக்கு நேர்வழி தெரிந்திலேன்; ஒளி விளங்கும் வில்லும் அம்புந் தாங்கிய நீர் யாவர் என்று கேட்க அவாவுகின்றேன்'' என்றனன். (4)

''யாம் அழகுமலிந்த உலகாளிறைவன் குமாரன்; பெரிய வேட்டை காரணமாக இங்கடைந்தேம்; நீ திகைப்புற வேண்டாம்; இந்நெடிய வழியே சென்று, வராக மலைப் பக்கமாய்ப் போவாயாக'' என்று பெருமான் புகன்றனன். (5)

இவ்வா றறிவுறுத்திய இறைவன் மறைந்த பின்பு, நன்மை பொருந்திய அவ் வராகமலையின் பக்கத்திலுள்ள ஓரிடத்தைச்

சேர்ந்தவுடன், சருவ சத்திமானாகிய முருகன் செயலால் வலிய இடும்பன் வலியிழந்து தளர்ந்து நின்றனன். (6)

தோட்சுமை சுமத்தற் காற்றாத அவ்விடும்பன் தன் காவடியைப் பசுந்தரையிற் றங்கவைத்தான். அதன்பின்பு, எழில்குன்றாத முனிவரது ஆச்சிரம மொன்றை யடைந்து இடும்பி தந்த பழங்களையுங் கிழங்குகளையும் உண்டனன்.(7)

அழகு நிரம்பிய அவ்வாச்சிரமத்தை யமைத்தவர் வாமதேவ ரென்னும் முனி சிரேஷ்ட ராவர். பின்பு, பருத்துயர்ந்த மேனியோடு விளங்கு மவ்விடும்பன் பரிசுத் தமாகிய அச்சுமையை மீண்டுந் தூக்க முயன்றனன். (8)

செவ்வேள் செய்கையால் அது மேலெழவில்லை. மலையை யொத்த புயங்களையுடைய அவ்விடும்பன் இஃதென்கொலோ என்று கருதி, தனது தக்க தோள்வலி முழுதையும் பயன்படுத்திப் பார்த்தான். தன் கருத்து நிறைவேறாமையை நோக்கி நெஞ்சம் நொந்தனன். (9)

சந்த முனிவராகிய அருணகிரிநாதர் வழியைப் பற்றுவோர்காள்! தம்பாலுள்ள மாற்றுயர்ந்த பொன்னையும் பிற பொருள்களையும் இழந்துவிட்டவர் நெஞ்சம்போல இடும்பன் மனம் புழுங்கிச் சுற்றிப் பார்க்கும்போது இளமைத் திருமேனியெழில் பிர காசிக்கு மொருவனைச் சிவகோட்டின்மீது கண்ணுற்றனன். (10)

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (ஆறாம்பத்து)

### *அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சி**வகிரிமே னிலவுகின்ற செங்கனிவாய்ச்
சிறுவனையோர் குராவின் கீழ்க்காண்
தவமுடையா னரியவிந்தக் கட்டழகார்
தனிமழவ னியக்கன் றானோ
புவனமெலா மிறைஞ்சுமுரு கன்றானோ
வெனக்கருதி யருகு போய்ப்பார்த்
தவிர்சிறைதா னிலைமயிலின் றாதலினின்
னோன்வேறென் றகஞ்செய் தானால்.
1

**அ**வ்வாறு துணிந்தவவன் பிடர்கிடக்கும்
புன்குடுமி யழகு மாசு
கவ்வாத கருணைவிழி யிரண்டுமதி காந்திகிளர்
முகமு மார்பிற்
செவ்வாட கமெனவவிர் பூணூ லுந் திருக்கரத்திற்
றிடனார் கோலும்
எவ்வாசு மறுதிறத்த கோவணமு மிலங்கநிற்கு
மிளைஞற் பார்த்து. 2

**சி**றுவநீ தனித்துநிற்ற லெவன்வயவை தப்பியிந்தச்
சிலைசேர்ந் தாயோ
மறுவினீ திருவனைத்து மோங்கலெனத் திரண்டனவா
லிவற்றை மாண்பிற்

பெறுவனீ றுறினுமெனு மாசையினாற் போந்தனையோ
பேசா யென்ன
உறுகணீ றிலியாகு முருகனஙன் முகிழ்த்தநகை
யொன்றே செய்தான். 3

**ந**கைகணித்தோ னிவன்வடிவு சிறுமைத்தாங் காரநனி
பெரிதா மென்றோர்
தகைமையிற்காய் தலையுடைய னாய்நாத விந்துவெனச்
சாற்ற வுள்ள
சிகரிவிட்டே புறம்போயான் கொலையவுண
னென்றுசொலித் திமிறி நின்றான்
குகனுமிக்கோ டெமதிருக்கை வலியுளதேற்
கொடுபோவென் றோதி னானால். 4

**ம**லையிரண்டுங் கடந்தப்பாற் போகாதிவ் வணஞ்சொன்ன
வாயாய் வஞ்ச
நிலையில்விஞ்சு பவன்போலு நீயெனச்சொல் பவன்கடித்த
வெயிற னீண்ட
தொலையியங்கு சிவந்தவிழி யானெறித்த புருவத்தான்
சோர்வில் லாத
அலையுறழ்ந்த வெகுளியன்கை பிசைந்தவனாய்க்
குராவடியிற் பாய்ந்தா னம்மா. 5

**பா**ய்ந்தவுடன் வலக்கரத்தே கோலுடையக் குருந்துருவப்
பகவா னன்னோன்
மாய்ந்திடவொர் விளையாடல் புரிந்தனனஞ் ஞான்றிகலன்
வான்க டாகஞ்

சாய்ந்ததென வலறிநனி வீழ்ந்தனனப் பெருந்துழனி
தனையுங் கேட்பான்
வாய்ந்தசெவி யிடும்பிகது மெனப்போந்து தன்கொழுநன்
மருங்குற் றாளால். 6

**அ**ப்பொழுது பிரமதண்டும் பாம்புமிக வஞ்சியகத்
தியற்கண் டெல்லாஞ்
செப்பியபின் றமவிருக்கை புக்கனவவ் விடும்பியிடும்
பனிரு செங்கண்
ஒப்பலரை விரல்கள்கொடு தீண்டியுநா சிகைவைத்து
முயிரின் றென்றே
துப்புறுதன் றுவர்வாயிற் புடைத்துமுக மறைந்துணர்வு
சோர்ந்து சாய்ந்தாள். 7

**மூ**ர்ச்சைதெளிந் தெழுவார்போ லெழுந்தவவ ளென்கணவா
முடிந்தா யாயுள்
சீர்ச்சைல மெனவீழ்ந்திங் கென்றனைவிட் டெவ்வாறு
சென்றா யீட்டும்
ஆர்ச்சிதமற் றறியேனே நின்னையல்லா லிப்படிநீ
யயர்த லாமோ
பூர்ச்சவன மடைந்துவந்த பலனிவ்வா றாயதுகொல்
புனித வாழ்வே. 8

**ம**ங்கலநா ணதுபூட்டி மணந்தகளி றேயுன்னை வரைந்து
செல்லேன்
எங்குமெனா வுரைத்தபடி புரிந்திஞ்ஞான் றெனைவிடுத்தா
யேது குற்றம்

இங்கெளியே னிழைத்தேனென் மனமழுங்கு கின்றதரோ
வெனத்தன் மார்பிற்
செங்கரமே வுறவறைந்து வயிறுபிசைந் தாளழுதா
டிகைத்தாண் மன்னோ. 9

**க**ணவனது முகத்தோடு தன்முகம்வைத் தேகலுழ்ந்தாள்
கரங்கண் மோந்தாள்
பிணமெனவும் விழுந்தனவோ வெனக்கழல்கண்
முத்தமிட்டாள் பிரிந்தா யோவென்
றுணர்வுவதி யுரமேல்வீழ்ந் தென்னரசே யென்றிருவே
யுனைநான் றோற்கப்
பணியபவ மறியேனே யெனவுமழு தாளொலியன்
பரிவுள் ளீரே. 10

*சிவகிரியின் மேல் விளங்குகின்ற செம்மை கனிந்த வாயையுடைய சிறு பிராய முடையானொருவனைக் குரா மரத்தின் கீழே தரிசிக்குந் தவமுடைய இடும்பன் ‘‘அருமையான கட்டழகு வாய்ந்த இத்தனி நிற்கும் இளைஞன் கந்தருவனோ? அல்லது உலகமெல்லாம் வணங்குகின்ற முருகன்றானோ?’’ என்றெண்ணி, நெருங்கிப் போய்ப் பார்த்து, இவனுக்கு விளக்கமுடைச் சிறகு களில்லை; மயிலுமில்லை. ஆதலா லிவன் வேறொருவனாயிருக்க வேண்டுமென்று நிச்சயித்தனன். (1)*

*அவ்வண்ண நிச்சயித்த அவன், பிடர்மீது கிடக்கின்ற சிறு குடுமியினழகும் குற்றமொன்று மணுகாத கருணை பொழி கண்ணிணைகளும், பேரொளிவீ சுந் திருமுகமும், திருமார்பிற் செம்பொன்னென விளங்கு பூணூலும், திருக்கரத்தில் வலிய*

*தண்டமும், அரையில் எக்குற்றமுமற்ற கோவணமும் பொலிவுற நிற்கும் இளைஞனை நோக்கி,- (2)*

*''இளைஞ! நீ தனித்திங்கு நிற்றல் யாது குறித்து? வழிதப்பி இவ்வரை அடைந்தனை யோ? பல்வகைச் செல்வங்களும் இம்மலைகளென ஒருங்கு திரண்டுள்ளன; ஆதலாற்றான் (இவன் தூக்கிச் செல்பவனாயினன்) உயிர்க்கிறுதி ''வரினும் இவற்றைக் கைப்பற்றுவே னென் னும் ஆசையினால் எழிலுடைய நீ இங்கு வந்தனையோ? யாதென்பது தெரிவிப்பாயாக'' என்று கேட்க; துன்பமும் நாசமுமில்லாத முருகநாதன், அங்ஙனங் குறுநகை மட்டுமே செய்தனன். (திருவாய் திறந்தொன்றுங் கூறினா னல்லன்) (3)*

*அந்நகையினை அள விட்ட இடும்பன், ''இவன், உருவமோ சிறியது; அகங்காரமோ மிகப்பெரியதாம்'' என்றுணர்ந்த பெருமையாற் கோபங்கொண்டவனாய் ''நாத விந்துக்களெனச் சொல்லவுள்ள இம்மலைகளைவிட்டுப் புறத்தே செல்; யான் கொலைத் தொழில் புரியும் அசுரன்'' என்று கர்ச்சித்துத் திமிறி நின்றனன். குகனும், ''இம்மலை எமதிருப்பிடமாகும்; உனக்காற்ற லிருக்குமாயின் இதனைக் கொண்டு போ'' என்றுரைத்தனன். (4)*

*''இவ்விரு மலைகளையும்விட் டப்பாற் போகாது இவ்வண்ணங் கூறிய நாவுடையாய்! நீ வஞ்சகத்தன்மையிலே தலை சிறந்தவன் போலும்'' என்று கழறுமிடும்பன், கடித்த பற்களையுடையவனும், நெடுந்தூரங் காண வல்ல சிவந்த விழிகளையுடையவனும், நெறித்த புருவங்களை யுடையவனும், தளர்வுறாது வீசும் அலைகள் போன்ற கோபத்தை யுடையவனும், பிசைந்த கைகளை*

யுடையவனுமாய் முருகு நிற்கின்ற குராமரத்தடியிற் பாய்ந்தனன் அம்மா! (5)

பாய்ந்தவுடனே, வலத்திருக்கரத்திலே தண்டமுடைய இளங்கோலப் பகவான், அவ்விடும்பன் மடிந்து விழும்படி ஒரு திருவிளையாடல் புரிந்தனன். அப்போது இடும்பன், அண்ட கடாகம் வெடித்துச் சாய்ந்த தென்னப் பெரிதும் அலறி வீழ்ந்தனன். அந்தப் பெருஞ் சத்தத்தையுங் கேட்கும் பொருட்டு வாய்ந்த செவிகளையுடைய இடும்பி, கதுமென ஓடிவந்து தன் கணவனது பக்கமடைந்தனள். (6)

அவ்வமையத்திற் பிரமதண்டமுந் தாம்பாகிய பாம்பும் பேரச்சங்கொண்டு அகத்திய மாமுனிவரைக் கண்டு நிகழ்ந்த வற்றையெல்லாந் தெரிவித்த பின்பு தம்மிருப்பிடம் புகுந்து விட்டன. அவ்விடும்பி, இடும்பனுடைய இரண்டு சிவந்த அழகிய கண்மலர்களைப் பரிசித்துப் பார்த்தும் மூக்கிற் கைவைத் துணர்ந்தும் உயிரில்லை யென்று செம்மையுற்ற தன் பவளவாயி லடித்தும் முகத்தி லறைந்தும் உணர்வு மாழ்கி வீழ்ந்தாள். (7)

பின்பு, மூர்ச்சை தெளிந் தெழுபவரைப் போலெழுந்த அவ்விடும்பி, ‘‘என் கணவரே! ஆயுள் முடியப் பெற்றீரோ? சிறந்த மலைபோ லிங்கு வீழ்ந்து என்னைத் தனித்திருக்கவிட்டு எங்ஙனம் போயினீர்? உம்மையன்றிச் சேமித்து வைத்த பொருள் அறியேனே! இவ்வண்ணம் நீர் செய்தன் முறையோ? பரிசுத்தமான அன்பே! நாம் பூர்ச்சவனம் போய்வந்த பல னிவ்வாறு முடிந்தது கொல்லோ? (8)

மாங்கலிய சூத்திரத்தை என் கழுத்திற்பூட்டி யென்னை மணம்புரிந்த களிறே! நின்னைவிட்டு எவ்விடத்திற் கேனும் பிரிந்துபோகேன் என்று ஆதியிற் கூறியபடியே இதுகாறும் நடந்து என்னைவிட்டுப் பிரிந்தீர்; ஏழையேன் இங்கே யாது

*பிழை யிழைத்தேன்? நெஞ்சம் வருந்துகின்றதே!'' என்று தன் சிவந்த கைகளால் மார்பில் மோதி வயிற்றைப் பிசைந்தாள்; அழுதாள்; திகைத்தாள்.* (9)

*அருணகிரி நாதனார்பா லன்புடையீர்! தன் நாயகன் முகத்தோடு தன் முகத்தை வைத்துக் கதறினாள்; கைகளை யெடுத்து மோந்தாள்; இக்கால்கள் பிணமென்னும் படி வீழ்ந்து விட்டனவோ'' என்றிரங்கி அவற்றை முத்தமிட்டாள்; உணர்விற் கிடனாயிருந்த மார்பின் மீது ''என்னைப் பிரிந்தனையோ'' என்று வீழ்ந்து ''என்னரசே! என் செல்வமே! உம்மை யிழக்கும்படி யான் செய்த பாவம் ஈதென அறிகிலேனே'' என்றும் புலம்பினாள்.* (10)

## திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

### (ஏழாம்பத்து)

***கலிநிலைத்துறை.***

அடியொன்றற்குப்பன்னீரக்கரம்.

**கை**யே கூப்பித் தெய்வமி றைஞ்சல் காணேனீ
மையார் கூந்த லென்னொடு லாவு மால்காணேன்
பையா ரின்சொற் பன்னுதி றங்கள் காணேனின்
றையோ வாழ்க்கை சொப்பன மாயிற் றேமாதோ. 1

**நோ**வே யார்க்குஞ் செய்தில மேநன் னோன்பாவிச்
சாவே நிற்கேய் வித்தவர் யாவர் சாற்றாயென்
கோவே நின்னைக் கொன்றவ ரென்னை யுங்கோறல்
மாவே யேயச் செய்கில ரோவன் னோய்மாய்வான். 2

**தா**ய்தா னில்லை தந்தையு மில்லை சார்பாமோர்
சேய்தா னில்லை சோதர மில்லை தேய்வேயோர்
பேய்போ லானே னெங்குறு வேனென் பேறேயிந்
நோய்போ மாறொன் றோதுதி நுண்மா ணோர்ந்தேயோ. 3

**பூ**லோ கிற்கும் வானினி தென்று போனாயோ
மாலோ டென்னை யுங்கொடு போகா வாமாண்போ
பாலோ கண்டோ தேனமு தோவின் பாகோவென்
றாலோ ரீன மின்றென நின்னன் பாய்ந்தேனே. 4

**ஆ**றா வென்றுன் பாறுதல் கோடற் கன்பானீ
வீறா ராக்கை மேவியெ மூாயோ மேலோனே
காறா ராநன் னீதியெல் லாங்கற் றாய்பாரி
ஈறா மாறுங் கற்றனை கொல்லோ வெம்மானே 5

**எ**ன்னா ராவீ யென்களை கண்ணே யீர்ம்பாகாய்த்
துன்னா ரின்பே கோடுசு மந்த தோள்வீரா
பொன்னார் தொங்கற் பூஞ்செவி யாவிப் போதேயென்
இன்னா வோய்வா னோடிவ ராயோ வென்வாழ்வே. 6

**செ**வ்வேள் பாதஞ் சிந்தையில் வைத்தே னேயாலஃ
திவ்வே ளைக்கோர் தண்ணளி செய்யா தோவேழை
நொவ்வே னோக்கா தெங்கொளித் தாயென்
னோன்பேமெய்
துவ்வா விண்ணா யேனுமொ ரின்சொற் சொல்லாயோ. 7

**எ**ண்ணா ரோராத் தென்மலை வாழ்ோ ரேந்தாலோ
விண்ணா டுய்யுந் தேவர்க ளேநும் மெய்க்கூறு
பண்ணா துய்ந்தே னேகண வன்கதி பார்த்தீரால்
தண்ணா ரென்வாழ் வைத்தரல் செய்யீ ரோவாலோ. 8

**இ**ச்சை லச்சீ ரெண்ணினுங் கேடின் றென்றோனேண்
கச்சை மஞ்சோ டிங்கிறந் தானே காசாராப்
பொச்சை காளென் புண்ணிய மூர்த்தி யெங்கேய்ந்தான்
பச்சை நந்தாப் பாதபங் காள்புட் காளோதீர். 9

**எ**ன்கண் வார்நீர் பார்த்திரங் காநீ ரேய்ந்தீரே
புன்கண் போமா றாவிது றப்பே னென்றேமீன்
மின்கண் மெய்ந்நோன் பாள்புலம் புற்றாள் வீழாறாந்
தன்கண் ணீர்தோய் மேனியள் சந்தன் சால்பீரே. 10

*நீர் உம்முடைய கரங்களைக் குவித்துத் தெய்வ வணக்கம் புரிதலைக் காண்கிலேன்; கரிய கூந்தலுடைய என்னோடுலாவும் அன்பைக் காண்கிலேன்; அழகிய இன்சொற் புகலும் வகைகளைக் காண்கிலேன்: அந்தோ! நம் வாழ்க்கை இத்தினங் கனவா யொழிந்ததே! (1)*

*நாமெவர்க்கும் ஒரு துன்புஞ் செய்தோமில்லையே! நல்ல நோன்புகளை யனுட்டித்தவரே! உமக்கு இம் மரணத்தை யுண்டுபண்ணினவர் யாவர் சொல்லுவீராக; என் தலைவரே! உம்மைக் கொன்றவர் அவர்க்குப் பெருமை பொருந்த என்னையுங் கொல்ல மாட்டாரோ? எனது துன்பந் தொலையும்படி, (2)*

எனக்குத் தாயுமில்லை; தந்தையுமில்லை; உதவியாய் நிற்க ஒரு பிள்ளையும் மில்லை; உடன் பிறந்தார் தாமுமில்லை; ஏழைப் பேய்போலானேன்; எவ்விடம் புகுவேன்? என் செல்வமே! சிறுமை பெருமை யுணர்ந்து யான் படுந் துன்ப நீங்கு தற்கு ஒருபாய முரைப்பாயாக. (3)

மண்ணுலகத்தினும் விண்ணுலகம் இனிதென்று அங்கே போனீரோ? ஆவதேல் அன்போடென்னையு முடன் கொண்டு போகாவாறு சிறப்பாமோ? நுமதன்பினைப் பால்; கற்கண்டு, தேன், அமுதம், இனிய பாகு என்றுரைத்தால் இழுக்கில்லை யென்று ஆய்ந்திருந்தேனே. (4)

மேன்மையுடையீர்! எனது ஆறாத்துயரத்தை ஆற்றுதற் பொருட்டு நீர் அன்போடு உமது வீறுபாடுடைய உடலிற் பொருந்தி யெழுந்திருக்கமாட்டீரோ? எம்பெருமானே! அளவில்லாத நல்ல நீதிகளையெல்லாங் கற்றுள்ள நீர் உம்முடைய மனைவி உமது பிரிவினா லுயிர்துறக்கும் வழியையுங் கற்றிருந்தீர் போலும்! (5)

எனது ஆருயிரே! எனக்குற்ற துணையே! குளிர்ந்த பாகமாய் நிரம்பிய அரிய இன்பமே! மலைகளைச் சுமந்த தோள்படைத்த வீரரே! பொன் பொருந்திய குண்டலங் களோடுங் கூடிய அழகிய காதுகளையுடையீர்! என் வாழ்வே! (எங்கிருப்பினும்) இப்பொழுதே என்றுன்ப நீங்கும் பொருட்டு ஓடி வரமாட்டீரோ? (6)

செவ்வேள் திருவடிகளைச் சிந்தையிலிருத்தினேனே; அப்பக்தி இவ்வேளையில் எனக்கோர்கிருபை புரியாதோ? எனது தவமே! துன்படை யென்னை நோக்காமே எவ்விடத்தி

*லொளித்துக் கொண்டனை! இப்போது அசரீரியாகவேனும் எளியேனுக் கிரங்கி ஓரின் சொற் கூறமாட்டாயோ? (7)*

*மதியாதார் மதிக்கெட்டாப் பொதிகை மாமுனிவரே! வானுலகில் வாழுந் தேவர்களே! நுங்கண் மெய்ந்நெறிக்கு ஊறொன்று முஞற்றாது இல்லற வாழ்க்கை புரிந்தேனே; என் கணவனுக்குற்ற கதியைப் பார்த்தீர்களன்றோ? அருளார்ந்த என் வாழ்வை மறுபடியும் எனக்குக் கொடுக்கமாட்டீர்களோ? (8)*

*இக் குவடுகளின் பெருமையை மனத்திலெண்ணினும் ஒரு கேடு மணுகாது என்று கட்டுரைத்த என் கணவர் தாம் கட்டிய வலிய கச்சையினழகு குலையா திருப்பவும் (அக்குவடுகளின் அருகிடமாகிய) இங் கிறந்துபட்டாரே! குற்றஞ்சாராக் குவடுகளே! பசுமை குன்றா மரங்களே! பறவைகளே! என் கணவராகிய புண்ணியமூர்த்தி எங்குள்ளார் கூறுவீர்களாக. (9)*

*நீங்கள் என் துன்பக்கண்ணீரைக் கண்டும் மனமிரங்காத் தன்மை பொருந் தியுள்ளீர்கள்; இனி, என் துயரந் தொலையுமாறு என்னுயிர் துறப்பேன் என்று கயல் மீனென மிளிருங் கண்ணும் உண்மை விரதமு முடையவளும், மலையருவி யொக்குந் தன் கண்ணீரால் நனைந்த மேனியினளுமான இடும்பி புலம்பினாள்; சந்த முனிவராகிய அருணகிரிநாதர் சால்புடையீர்! (10)*

# திருப்பழநிமலைத்திருவிளையாடல்.

## (எட்டாம்பத்து)

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். (இசை)*

இரண்டுசீர்வண்ணம்.

**மா**சி லாதவி டும்பி கூரஞர் யாவு மோர்ந்தெழின் மாமணித்
தேசு லாமுரு வம்பி றங்குசி கண்டி மீதுபெ ருந்திறன்
மூசு மாகண நன்கு சூழ்தர மொய்த்த துந்துபி யார்ப்பவங்
கீச னோர்புதல் வன்றி கழ்ந்ததை யேரி டும்பிக ணுற்றனள்.
1

**கா**ண்ட லுங்கலி மீன வாயினி னின்று தப்பிய கன்னிபோல்
ஆண்ட வன்றிரு முன்பு போயரு ளார்ப ராபர வென்களம்
பூண்ட லங்கிய தாலிநாளும்வி ளங்கு மாறருள் புரிதடுத்
தாண்ட வெம்பெரு மான்றொ ழும்பிவ ளாவ ளென்றுவ
ணங்கினாள். 2

**அ**ச்சொ லேற்றபி ரான்க டைக்கண ளித்த னன்பொறை
மொய்ம்பனுங்
கச்ச மேற்கொளு றக்க நீத்தெழு காளை போலவெ
ழுந்துபூஞ்
செச்சை வேற்பெரு மான்றி ருத்தொழல் செய்தி டுஞ்செயல்
கொண்டனன்
எச்ச நீக்கிய புத்தி விஞ்சியல் பேணெ முந்தமை யாலரோ.3

**ந**ல்ல மாமலர் பாத மாமலர் தூவி யர்ச்சனை நன்குசெய்
தல்ல னூறிறை வாச ராசரம் யாவு மாள்பர மாசிவா
செல்ல லூனுடல் புல்ல னோயுறல் செயிரி ராகமி லாமுதால்
எல்லை தீரறி வின்ப மாகவி லங்கு செஞ்சிவ சோதியே. 4

**ஆ**தி யந்தமு நள்ளு மில்பொரு ளென்ற றைந்திடு தொன்மறை
ஓது மந்தண னுந்தெ ரிந்துகொ ளாத வுன்றிரு வாடலை
ஆதர் சங்கமி ருந்த யானறி நீர்மை யெங்ஙன மாமறா
நீதி கொண்டெனை யாளு மாறெழ றந்த நீளரு
ளெந்தையே. 5

**எ**ன்று நற்றுதி செய்த தானவ னைப்பி ரானெது
வேண்டுநிற்
கென்று ரைத்தலும் யான்வ ரம்பெற லிவ்வ ரைக்கணி
ருந்துகொண்
டென்று நிற்கிய லூழி யஞ்செய லென்றி ரப்பவவ்
வாறுசெய்
கென்று சொற்றன னேக டம்பனி டும்ப னுண்மகிழ்
வாகியே. 6

**ஆ**டி னானடி பாடி னானரு ளன்பை யின்பென
வெண்ணினான்
ஓடி னானனி துள்ளி னானகை புல்லி னான்பிறி
தோர்பொருள்
நாடி யேபுக ழேனெ னச்சொலி னான னோனையு
நாடுசீர்
தேடி னாளையு முய்தி ரென்றருள் செய்து சேய்தளி
யெய்தினான். 7

**ஓ**ம லங்குரு வேல வன்கடை விழியு வப்பினி டும்பியுள்
வீம லர்ந்ததெ னாம கிழ்ந்தனள் விண்ணு லாமொரு வாணியே
தூம லிந்தக டம்ப னால்வலி துன்றி டும்பனில் லாண்முகப்
பூம லர்ந்ததெ னாம கிழ்ந்தனள் பூமி யென்னும டந்தையே.
8

**தெ**ன்ம லைத்திரு மாமு னித்தலை வன்றி ருக்கொளி
டும்பனை
வன்ம லைத்தல நோக்கி நீயிஙன் வாழ்க வென்றயில்
வேற்சிவன்
பொன்ம லர்க்கழல் போற்றி யேகின னோதி காவடி
சேர்ப்பவர்
நன்ம லைத்திற லானை யுந்தொழல் செய்ய வேண்டுநன்
னீரரே. 9

**அ**ண்டர் நாயகன் மந்தி ரம்பிற வக்க ரங்களை
யொக்குநேர்
தண்ட பாணியி ருக்கு மிம்மலை தரைவி லங்கலை
யொத்தன
தண்ட பாணியை யீச னீபழ மென்ற தாற்பழ நிப்பெயர்
கொண்ட தேவள வத்த லம்புகழ் கூறி னோனெறி
தேருளீர். 10

திருக்காவடிப் பிரார்த்தனையாளர் இல்லத்தியற்றும் ஆராதனை
முடிவில் இத்திருவிளையாடல் படிக்கப்பட்டு பூசிக்கப்படுமேல்,

திருவுள மினிதுவந்தருளும்; ஐயமின்று; ஓம்.

*குற்றமில்லாத இடும்பி படுந்துயரம் முழுது முணர்ந்தருளி, அழகிய சிறந்த நவமணியொளி பொருந்திய*

வடிவோடு விளங்கும் மயிலின் மீது, பெருவன்மை படைத்த சிறந்த சிவகணங்கள் நெருக்கமாய்ச் சூழ்ந்துவரவும் நிறைந்த தேவ துந்துபிகள் முழங்கவுஞ் சிவகுமாரன் அவ்விடத்துப் பிரசன்னமானதை வனப்பு வாய்ந்த இடும்பி பார்த்தனள். (1)

பார்த்தவுடனே முதலை வாயினின்று தப்பிய இளம் பெண் போல் ஆண்டவன் திருமுன்பு சென்று "அருட்குண நிறைந்த பராபரனே! அடியாள் கழுத் தணிந்து கொண்டதும் இன்றுகாறும் இலகியதுமான தாலி எக்காலமும் (என் கழுத்தில்) இலகும் வண்ணங் கிருபை செய்வாய். துன்பத்தினின்றுந் தடுத்தாள வந்த எங்கள் பெருமானே! இவளும் நினக்கொரு தொழும்பியேயாவள்" என்று விண்ணப்பித்துப் பணிந்தாள். (2)

அவ்விண்ணப்பத்தைத் திருச்செவியிலேற்றருளிய பெருமான், திருக்கடைக் கண்ணோக்கஞ் செய்தருளினன். மலைகளையொத்த புஜங்களுடையிடும்பனும் அளவை மேற்கொண்ட உறக்கத்தி லிருந்து விழித்தெழுங் காளைபோலவெழுந்து, குறைவு நீக்கம் பெற்ற வுணர்வு தன்பாற் சிறக்குந்தன்மை தோன்றிய காரணத்தாற் பூஞ்செச்சை வேற் பெருமானைத் தொழத் தொடங்கினன். (3)

இறைவன் திருவடி மலர்களில் மிகச்சிறந்த மலர்களைத் தூவி முறைப்படி யருச்சித்து, "துன்பந் துடைக்கும் இறைவனே! சராசரமாயுள்ள அனைத்தையும் ஆளுமொரு பரமனே! சிவனே! மரணம் ஊனுடம்பு புல்லல் நோயுறல் குற்றம் இச்சை இவைகளில்லாத முதற்பொருளே! அகண்ட அறிவாகவும் பூரணானந்தமாகவும் விளங்கு செஞ்சிவ சோதியே! (4)

*நீங்காத நீதியினால் அடியேனை யாட்கொள்ளுமாறு எழுந்தருளி வந்த முகிழ்த்த பெருங்கருணைத் தந்தையே! நின்னை ஆதியும் நடுவும் அந்தமுமில்லாப் பொருளென்று முழங்கும் பழைய வேதங்களை யோதும் பிரமதேவன்றானும் அறிய வொண்ணாத நின் றிருவிளையாட்டை, அறிவிலார் கூட்டத்தி லிருந்த அடியேன் அறிந்துகொள்ளுந் தன்மை யாங்ஙனங் கைகூடும்?''* (5)

*என்று நல்ல தோத்திரஞ் செய்த இடும்பனை (நோக்கி) இறைவன், ''நினக்கு வேண்டுவதியாது?'' என்று வினவினவுடன், ''யான் விரும்பும் வரமாவது இம்மலை யின் கண்ணேயே தங்கியிருந்து நினக்குவப்பாயுள்ள தொண்டுகளை எக்காலமுஞ் செய்து கொண்டிருத்தலேயாம்'' என்று அவன் விண்ணப்பிக்க; கடம்பன், ''அவ்வாறே செய்யக்கடவாய்'' என்றனுக்கிரகித்தனன். அத்திற வரப்பிரசாதம் பெற்ற இடும்பன் மனமகிழ்ச்சி யுடையவனாகி,-* (6)

*ஆனந்தக் கூத்தாடினான்; முருகவேள் திருவடிகளைப் பாடினான்: இறைவன் தன்மாட்டுக் காட்டிய அன்பைப் பேரின்பமென்று மதித்தான்; (உவகை மிகுதியால்) ஓடினான்; துள்ளிப் பாய்ந்தான்; பெருமகிழ்ச்சியி லாழ்ந்தான்; ''மற்றெப் பொருளையும் விரும்பிப் புகழமாட்டேன்'' என்று கட்டுரைத்தான். அத்தகைய இடும்பனையும், அவனைக் கணவனாய்க் கொள்ளுஞ் சிறப்பினைத் தேடிக்கொண்ட இடும்பியையும் இளம் பூரணன் நோக்கி, ''நீவிர் வாழ்வீர்க ளாக'' என்றருளிச் செய்து தனதிருக்கை சேர்ந்தனன்.* (7)

*பிரணவ வுருவோடு விளங்கு வேற்பிரான் கடைக்கண் பார்வை காட்டிய மகிழ்ச்சியால் இடும்பியினது இதய கமலம்*

*மலர்ந்த தென்று சிறந்த ஆகாயவாணி மகிழ்ச்சி யுற்றனள். புனித நிறைந்த கடம்பனருளினால், வீரஞ்செறிந்த இடும்பன் காதலியினது முக கமலம் மலர்ந்ததென்று பூமி தேவியும் மகிழ்ச்சி யுற்றனள். (8)*

*நல்ல தன்மையுடையீர்! (இதன்மேல்) மலயமலை வாழும் ஸ்ரீ முனி சிரேட்டராகிய அகத்தியனார் இறைவனருளாஞ் செல்வம் பெற்ற இடும்பனை வலிய அம் மலை யடிவாரத்தே பார்த்து ''நீ இங்கே வாழக்கடவாய்'' என்று சொல்லி, கூரிய வேலேந்திய சண்முக சிவனுடைய அழகிய திருவடித் தாமரைகளைத் தொழுது தமதிருக்கையாகிய மலையையடைந்தனர். காவடி செலுத்து வோர்கள், மலை சுமந்துவந்த இடும்பனையுந் தொழுதல் வேண்டும். (9)*

*திருப்புகழ் முனிவர் நெறியைக் கடைப்பிடித்த உளமுடையீர்! தேவ தேவனுடைய திருநாம மந்திர எழுத்துக்கள், பிற எழுத்துக்களை யொத்திருக்கும் இயல்பு போல, தண்டபாணி வீற்றிருக்கும் இம்மலைகளும் புவிமீதுள்ள ஏனைய மலைகளை யொத் திருப்பன வாயின. சிவபிரான், தண்டபாணியை நோக்கிப் ''பழம் நீ'' என்று கூறியதானால் வளப்பம் பொருந்திய அத்தலமும் 'பழநி' என்னும் பெயர் பூண்டது. (10)*

## திருப்பழநிமலைத் திருவிளையாடல் முற்றிற்று.

## முதல் மண்டலம்

# திருப்பழநிமலை

**ஆ**ழிசுல வும்புவி யெலாமொளிசெய் விண்ணின்மணி
யனையமணி முடியிலங்க
அகலுள்வட வரையைச் சடாலென்ன மோதிடற்
கானமொய்ம் பணிதுலங்க
நாழியொ ரரைக்குணிசி சரருயிர் முருக்குமொரு
நலிவில்வடி வேல்விளங்க
நடுவற்ற வீனப் பிசாசுகள் பிரேதங்க
ணடைவிட் டுளங்கலங்க
வேழமிவ ரிந்திராதி திசைநாதர் தவநாதர்
வெருவுற்று ளடிவணங்க
விண்டலமு மண்டலமு மசைவுற்று நிலைபிசகி
மேருகிரி யுங்குலுங்க
ஊழிமுடி வெனநவிர மேறுமுதல் வாவென்ற
னூறுகெட வென்றுவருவாய்
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 1

**க**ண்ணேகண் மணியே கதிக்குரிய ஞானமே
கருணையே கருணைரசமே
கருவினிற் கருவே தொழும்பனே னிதயவொண்
கமலமே கமலமணமே
விண்ணே விணொளியேநல் வேதவே தாந்தமே
மேதக வெறுக்கையரசே
வித்தார மானபுவ னப்பரப் பெங்கணும்
வியாபித்து நிற்குநிறைவே

தண்ணேறு நின்னடியை நண்ணாத பாவிபொய்
சாலவுஞ் சொற்றபாவி
தக்கோ ரிடத்துறவு பண்ணாத பாவிவெகு
தவறுக ளிழைத்தபாவி
உண்ணே ரிலாதபடு பாவிநா னுன்னரு
ளுறாதுய்ய விடனுமுண்டோ
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 2

**எ**த்தனை படித்தாலும் வஞ்சனை பொறாமைதா
மென்னைவிட் டகலவிலையே
இதமாக வெவ்வளவு சொன்னாலு மடமன
திணங்கிநின் றுருகவிலையே
பத்திநெறி யார்நட்பு மெய்தவிலை யினியென்ன
பண்ணுவே னின்கடைக்கண்
பார்வையென் பக்கல்வரு மேல்வம்பு போமின்பு
பற்றுமெண் கண்ணனெஞ்சஞ்
சுத்தம தடைந்தபி னவற்குரிய நிருமிதத்
தொழினல்கு திவ்வியவயனே
சுகுர்தவருள் வாரியே தூய்மன வெளிக்குளே
சுடருமா னந்தவடிவே
உத்தமத் திற்கெலா முத்தம விலாசமா
யுள்ளவொரு பெரியபொருளே
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 3

**நா**ட்டுப் படர்ப்பிணிகள் சோற்றுக் குரம்பையை
நசிப்பதோ சங்கையில்லை
நாளாகு மேலருட் காளாவ னோவென்னு
நடலையோ கொஞ்சமில்லை

கோட்டுக் குசத்திரதி கொண்கனலர் சொரிகின்ற
கொடுமையோ மெத்தமெத்த
கூறுமித் துயரெலா மிச்சிறுவ னெவ்விதங்
கொண்டுதெளி வானென்னவுன்
தாட்டிக வுளஞ்சிறிது கருதிடா தோவடியர்
தாபஞ் செகுக்கும்வள்ளால்
சரதவைச் சுரியசம் பன்னபரி பூரணத்
தண்ணருட் பெருவாரியே
ஒட்டிற் பெரும்பலி யெடுத்துண்ட வொருவற்
குரைத்தமா மந்திரகுருவே
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 4

**நெ**டியவுவர் சூழுமிப் பெரியநிலை தனிலுன்
னிஜாநந்த மடையநல்லோர்
நெக்குருகு பத்தியோ டெண்ணில்பல் காலநிலை
நின்றவ ருரைத்தநெறியிற்
கொடியமன தைத்திருத் தித்தவஞ் செய்கிறார்
கொங்கைமின் னார்நிதம்பக்
குழியிலே விழுநமக் கெந்தவா றதுவந்து
கூடுமென் றுள்கியுள்கிப்
பிடிபட்ட வுழையெனக் குழையுமென் னெஞ்சைநின்
பெரியதிரு வுள்ளமறியும்
பேயினுங் கடையனே னெனினுமுனை நம்பெனைப்
பீடையி னிறுத்தன்முறையோ
உடலினுக் குயிராகி யுயிரினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 5

**ச**ந்ததமு மிகையற விளங்குபர சிவயோக
தண்டா யுதப்பிரமமே
தண்ணளியை நாடுநர்க் கின்னமுத சாகரத்
தாரையைப் பொழிமாரியே
எந்தையே யருளரு ளெனக்கதறி னேன்மன
திரங்கினா யில்லையினிமேல்
எப்படி யரந்தைபொய்த் தின்புவந் தணையுமென்
றிதயமிக் கயர்கின்றதே
வந்தநா டொட்டிங் கிழைத்துள்ள தீமைபெரு
மலைபோ லிருப்பினும்வெளி
மணிமுன்ன ரேயிமக் குலமழிதல் போலழிய
வந்துநீ யுண்மைகூற
உந்தியிடை நின்றுன்னை யடையுமா திருவுளத்
தொல்லையொ ரெணங்கொளாயோ
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 6

**க**ருப்பையி லிராநின்ற வுயிர்தனக் குப்போன
கங்கிரம மாயளித்தும்
கல்லினுட் டங்குதே ரைக்குரிமை யாயவா
காரநித முங்கொடுத்தும்
திரப்படு சினைக்குணவு தேடியங்குதவியுந்
திதிசெய்நிழ லுள்ளவுன்றன்
சேவடிக ளைத்தொழுஞ் சீவனை யிரட்சகஞ்
செய்யாது விடுவைகொல்லோ
விருப்புள ரகத்திடை வதிந்துதிமி ரம்போழும்
விகுணமெய்ஞ் ஞானயோக
வித்தார வாழ்வுதந் தெக்காலு மழியாத
வீடுபெறு மாறுகங்கை

உருப்பட விடாதிந்த வுருவோடு முடிவுசெய
வுள்குமெம் பெரியபொருளே
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 7

**க**ணையன்ன தாரைவிழி கொடுமெள்ள நோக்கிக்
கருத்தைக் கெடுத்தெவரையும்
கமழ்மஞ்ச வணைமீ திருத்தியின் னுரைதந்து
காமா கமப்படிக்குக்
கணைவளைகள் கலகலென வுபயகர மலர்கொண்டு
கைச்சரச வரிசைபலவுங்
காட்டிவத னத்தோடு வதனம்வைத் தினியநற்
கனியென்ன வுடல்சுவைத்துப்
பணையம் பறித்தவுடன் மனைவிட் டகற்றும்
பகட்டிகளி னட்பொரீஇப்
பரமான நின்னையே நினையுமொரு நெஞ்சமென்
பானிமிர வருடியாணர்
உணர்வற்ற பதகருக் குதவாத தெய்வமே
யோதரிய வேதமுதலே
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 8

**அ**ல்லேறு முகிலொன்று நின்றோ ரரைக்கடிகை
யாசார மாரிபெயினும்
ஆயிரங் கிரணங்க ளவிரநிமை நேரம்விண்
ணனலிகன லைச்செய்யினும்
வல்லாண்மை தெவுளும்வங் கூழிமைப் போதெங்கு
மல்கிவிற லாவீசினும்
வாரிதிகள் கிஞ்சித்து முனைகொளினு மிப்பெரிய
வையக மிருக்குமோவிங்

கெல்லாமு னாக்கினைக் குள்ளா யிருந்தவை
யிகுக்கின்ற பேருதவியை
எண்ணாம னன்னடவை நண்ணாம லுன்னடிக
ளெந்நாளு முன்னாதிதே
உல்லாச மென்றுலக மயலிலுழி தருமண்ணை
யோயானும் யாவுமுணர்வோய்
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 9

**உ**லகிலெச் செல்வமுந் தவவிழுப் பத்தினா
லுண்டாகு முன்பினாக
உறவுள்ள துன்பெலா நீதிமு னநீதிபோ
லொழியுமென் றிறைவனூல்கள்
சொலும்வண்மை யானுமற் றுத்தியனு பவமெனச்
சொல்லளவை யானுமந்தத்
துகளறு தவத்தினின் றுஞ்செல்வ மிலையென்று
துணிவதுந் தவமானது
நலனற்ற பொய்யுரை வியர்ப்பிவைக ளாலழிவு
நண்ணுமென வுய்த்துணர்வதும்
நாணாளு நற்றவத் துயர்வதுந் தவமுள்ள
நல்லவர்க் கேயுண்டிநாள்
உலைகின்ற வெற்குமவ் வூமுள்ள தோசொலா
யுரனருண கிரியடிகளே
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே. 10

## இரண்டாவது மண்டலம்

# திருப்பழநி

*பண் - நட்டராகம்*

**சி**ங்கா நன்குதவுந் திரு வாறெ ழுத்தாளா
கங்கா ளன்குருவே நினை யேக ருத்தில்வைத்தேன்
மங்கா வாழ்வுடையா யெனை வாவென் றேயழையாய்
தெங்கார் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 1

**எ**ல்லா ருந்தொழுது நல மேற்க வென்றிலறம்
இல்லா மாதுறவா யில காறெ ழுத்திறைவா
வல்லார் வானவனே யெனை வாவென் றேயழையாய்
செல்வா தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 2

**நா**யே னுய்யவென்று நவில் வேன்வ ருகவென்று
நேயா நீவரலா நிஜ மாநம் பென்றுசொன்ன
வாயா வெம்பரனே யெனை வாவென் றேயழையாய்
சீயார் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 3

**எ**ன்னா வின்றுதியை யினி தேற்றெ னக்காக
நன்னா வையசைத்து நல மேயு ரைத்தெனையாள்
மன்னார் சின்மயனே யெனை வாவென் றேயழையாய்
தென்னார் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 4

**சூ**டே னின்னடியை யன்றித் துதித்து நானெதையும்
பாடே னெம்மானே பர மார்த்த சன்யாசீ
வாடா விண்மலரே யெனை வாவென் றேயழையாய்
சேடார் தென்பழநித் திருக்கோவி லுள்ளாயே. 5

**த**ந்தார் சித்தர்களுந் தனி ஞான விற்பனரும்
வந்தே தாள்பணிய நிற்கும் வரத மாமுனியே
மந்தா ரத்திருவே யெனை வாவென் றேயழையாய்
செந்தார்த் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 6

**மி**ன்னார் கௌபீனந் தனை வீக்கி மஞ்சழகார்
சன்னா சக்குருப்போற் றனி யாக நிற்குமருள்
மன்னே மாமுனியே யெனை வாவென் றேயழையாய்
தென்னார் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 7

**நா**னா சாதிகுல முரு நாமம் பாராமல்
ஊனார் சீவனெலா மரு ளுயிரென் றேமதிக்கும்
வானோர் தேசிகனே யெனை வாவென் றேயழையாய்
தேனார் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 8

**ச**த்தா நீறணிந்து கையிற் றண்ட மொன்றுடைய
கத்தா வாயெவர்க்கும் பர கதிநல் கையபது
மத்தார் பூணழகா வெனை வாவென் றேயழையாய்
சித்தா தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 9

**ம**ண்ணார் சீவனெலா மினு மாண்டெ ழாதவகை
பண்ணா நிற்குமருட் பர மேயண் ணாமலையான்
அண்ணா வென்னுயிரே யெனை வாவென் றேயழையாய்
தெண்ணார் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே. 10

# திருப்பழநி

## தக்கராகம்.

*பண் - கொல்லிக்கௌவாணம்.*

**இ**டையிறந்த நிலையையருள் சிறந்தகந்த வோங்கல்
　　என்னுமொரு சிலைச்சிமயங் களிற்றமிழ னெடுத்த
புடைமலிந்த சத்திகிரி சிவகிரியைத் தண்டிற்
　　பூட்டியிருங் காவடியெ னச்சுமந்தி டும்பன்
மடைமலிந்த வாவினன்கு டிக்கண்வைத்த போது
　　மகியிலுற வனைந்துசிவ கிரியின்மிசை நின்ற
படைமலிந்த தலமெனுநற் பழநிப்பதி மேவும்
　　பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 1

**ம**ணியரவிற் கண்வளரு மாமரைக்கண் ணானும்
　　மலர்த்தவிசு மீதுமிளிர் வாணிதலை மகனும்
அணிகயிலை யருநெறியி லரணிருந்துள் ளானும்
　　அருணன்பதி னோருருத்திர ரசுவனிதே வருமாத்
திணிமருவு சேடனுடன் றிகழிருநால் வசுவும்
　　சிந்தைசெய்த பெருங்கருணைத் திருவடியைத் தொழுதேன்
பணியிதுவென் றுரைத்தருடி பழநிப்பதி மேவும்
　　பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 2

**அ**ந்தகனுஞ் செஞ்சுடரு மிந்திரனீ சானன்
　　அனிலனிரு திபுனலிறை யளகையிறை யோனுஞ்
சந்ததமுங் கைதொழுத தரமறிந்தே யுரிய
　　சம்பத்துக ளளித்தவுன்றன் றாள்குரங்கு கின்றேன்
கந்தமுத லைந்திநிலை கடத்திநெறி கொடுத்துக்
　　கருவினுழை யாமலென்னைக் கலந்தடிமை கொள்ளாய்
பந்துரப்பொன் வண்டறையும் பழநிப்பதி மேவும்
　　பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 3

**தி**ங்களுமெல் லாதவனுஞ் சீவன்மழைக் கோளும்
சேய்சனியுந் தூதுவனுஞ் சீறரவி ரண்டும்
அங்கைதனி லளியலர்கொண் டருச்சனைமிக் காற்றி
யனந்தநுதி செய்தவுன்ற னடிதொழுது துதித்தேன்
மங்களமொ டேகருணை வாரிதியி லென்னை
மனமுவந்து குடையவிட்டு வழியடிமை கொள்ளாய்
பங்கயங்கண் மடலவிழும் பழநிப்பதி மேவும்
பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 4

**ச**லமடந்தை நிலமடந்தை சாரதையுஞ் சசியும்
சாயையொ டனன்மனைவி தண்ணளின மாதும்
திலகநுத லூர்வசியுந் திருமலிந்த ரம்பை
திலோத்தமையு மேத்துனது திருவடியைத் தொழுதேன்
சலமிகுந்தே யலைமலிந்த சனனக்கட னடுவே
தத்தளிக்கு மெனையுனது தண்ணருளோ டத்திற்
பலநிமிர வேற்றிக்கொளாய் பழநிப்பதி மேவும்
பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 5

**அ**த்திரியுங் கௌசிகனு மகத்தியன்கா சிபனும்
அரியதவ மார்க்கண்டனு மாங்கிரச முனியும்
புத்திமலி சமதக்கினி புலத்தியமா முனியும்
பொருவிகந்த வசிட்டனொடு பரத்துவச முனியும்
சத்தியமா வணங்கியவுன் றாள்குரங்கு கின்றேன்
தயவுடனல் லருளளித்துத் தாழடிமை கொள்ளாய்
பத்தர்கணஞ் சூழவுள்ள பழநிப்பதி மேவும்
பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 6

**ச**னகன்சுகன் பிருகுமுனி சனற்குமர முனியும்
 ததிமுனியு நாரதனுஞ் சத்தகுனன் முனியும்
வினையொழிந்த பதஞ்சலியும் வியாக்கிரக்கான் முனியும்
 வியாசனும்ப ராசரனும் விரதபற்ப முனியும்
தினமுவந்து கண்டவுன்றன் றிருவடியை வலித்தேன்
 திருவுளத்திற் கேற்றதொண்டு செயவடிமை கொள்ளாய்
பனிகிளர்ந்த கருவிகவி பழநிப்பதி மேவும்
 பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 7

**இ**யம்பரிய வருந்தவஞ்சா லிரணியமா முனியும்
 இறைமையுள்ள துருவாச னேரண்டன்பி னாகி
வயங்குசச்சி தானந்தனல் வான்மீகி ரோமன்
 மாதவங்கொள் கலைக்கோட்டு மாமுனியு மதிக
நயம்பெறவென் றுவந்துவந்து நாளுந்தரி சித்த
 நறுமணஞ்சா லுன்சரணை நானும்வழி பட்டேன்
பயன்படுமா றருள்புரிதி பழநிப்பதி மேவும்
 பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 8

**வா**ரிறுக்குங் கொங்கைவளர் மாதுமைகா லரியின்
 மணியுதித்த நவசத்திகண் மக்கணவ வீரர்
சீரிருக்கு மோரிலக்கர் தேசுதிக ழமரர்
 சிவகணமுங் கந்தருவர் சித்தருங்கின் னரரும்
ஏரிருக்கு நாகரொடு தானவர்மா னுடரும்
 மேத்துனது பூம்பதத்தை யெணுமெனைக்கண் பாராய்
பாரிருக்கும் வரைவளங்கொள் பழநிப்பதி மேவும்
 பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 9

**அ**ரியசித்தி யவிர்மதங்க ராசிறந்த வகுளி
யனாதிநத ராதிநத ரழகுமச்சேந் திரரும்
கரிலறுகோ ரக்கரொடு ககனநடை யுடைய
கடேந்திரர்ச தோகநதர் கருத்துறுசத் தியரும்
அருணகிரி யானுநினைந் தனந்தசித்தி படைத்த
அன்புகண்டு நின்பதத்தை யனுதினம்வந் தித்தேன்
பரிவுடனல் லருள்புரிதி பழநிப்பதி மேவும்
பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே. 10

## திருவாவினன்குடி

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்*

*பண் - பழம்பஞ்சுரம்*

**அ**ண்டர் யாவரு மறியொ ணாப்பொரு
ளாதி யந்தரந் தெரியொ ணாப்பொருள்
பண்டை நூலெலாம் பகரொ ணாப்பொருள்
பார மார்த்திக ஞான வான்பொருள்
எண்ட கைப்பொரு ளாகு நீதடி
யேந்து கின்றசன் னாசி போன்றதென்
தொண்ட னேனையிங் காண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 1

**(திரு) ஆவினன்குடியென்பது பழநிமலை யடிவாரத்தலம். அதிலிருக்கும்** ஶ்ரீசுப்பிரமணியத்தை **நோக்கிப் பாடியுள்ள இத்திருப்பதிகத்தில் என்னாண்டவனாகிய நீ மலை மீது தண்டபாணியாகத் தனி நிற்குங் காரணம் யாதென ஆக்கியோர் வினவிய பொருள் காணப்படுதலின், இங்ஙனம் அடிகள் அவ்விரண்டு மூர்த்திகளையு மிணைத்துத் துதித்தனரென வறிக.**

**நே**ரி லாவுய ராக்க வெள்வரை
நிலய முட்சிவ கணங்க ளேத்திடப்
பீரி லாக்கொலு விருந்து நின்பதம்
பெறவ ருந்திரு வடிய வர்க்கருள்
சூரி லாச்சைவ தெய்வ நீயொரு
துறவி போற்றனி நிற்ப தென்னதி
தூர மின்றெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 2

**ப**ரிதி பல்லொளி சுடர்கி ரீடமும்
பதும பாதவம் பரிபு ரங்களும்
மிருது மல்கெழின் மடியு டுக்கையு
மிறையி லொண்செவி யணிக ளுந்தன
தருகி னல்லிரு தேவி யும்மிலா
தாண்டி வேடம தான தென்னதி
துரித மாவெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 3

**அ**டல்கொள் பூதரும் வீர வாகுவொ
டமரும் வீரரு மோரி லக்கரும்
புடைசெ றிந்திடச் சரண மஞ்ஞையிற்
பொருவி லாதெழு தருப ராபரம்
தடவி சும்புயர் வரையி லேயொரு
தனிமை யாநனி நிற்ப தென்னுனைத்
தொடரு மென்றனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 4

**உ**லகி லேயுனைப் பாடுந் தொண்டுள
ருய்ய வோதவ ருய்ய வோமனச்
சலமில் யோகிக ளுய்ய வோநிகழ்
சருவ சீவருந் தவத்தி னுய்யவோ
தலையிற் பின்சிகை யரையிற் கோவணந்
தண்ட மங்கையிற் கொண்டு நின்றுளை
தொலைவி டாதெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 5

**பொ**ய்யு ளேனுயிர்க் கொலையு ளேன்பெரும்
புலையு ளேனெடுங் களவு ளேனிதம்
மையி டுங்கணி மயலு ளேன்மட
மருளு ளேன்பட ரிருளு ளேனிஙன்
உய்யு மாறருள் கூர்ந்து வந்தென்மு
னோது நின்னொர்த யாள மென்சொலத்
துய்ய னேயெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 6

**செ**ப்பொ ணாதவைம் பாச சாகரச்
செதும்பு ளேகிடந் தழுங்கி நன்னெறி
ஒப்பு றாவிழி நாய னேனிங
னுய்வ னோதிரு வருளி லாது மெய்
அப்ப னீயென மைந்த னானென
வாமொர் தொன்முறை காட்டி னாயிவண்
துப்ப னாயெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 7

**க**ழுதை யிற்கடை யாய நானுனைக்
கருத நன்னெறி கழறி னாய்நொடிப்
பொழுது நின்மறந் திருப்ப னோவினிப்
புகழ்சொ லாமொழி படிப்ப னோவுனை
முழுது மென்னக மாக்கி டாதினு
முளைப்ப னோமணிற் பதத்தை யல்லது
தொழுவ னோவெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 8

**மா**க நின்றுளை தீயி னின்றுளை
வளியி னின்றுளை மழையி னின்றுளை
போக நந்திரும் புவியி னின்றுளை
புகரின் மாமதி யிரவி நின்றுளை
ஆக நின்றிடு முயிரி னின்றுளை
யடிய னேனய லாவ தெங்ஙனம்
சோகம் வென்றெனை யாண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 9

**கு**லமி லாதவன் றலமி லாதவன்
கோளி லாதவ னாளி லாதவன்
மலமி லாதவ னாகு நீநெடு
மலையி லேறிய மார்க்க மென்கொலோர்
சலமி லாப்புகழ் பாடி னோனகந்
தாண்ட வம்புரிந் தாண்ட தேவெனைச்
சுலப மாகவிங் காண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே. 10

## பிழைபொறுக்க முறையீடு

முத்தரின் முதல்வா முதுமொழித் தலைவா
முட்டிலா வனப்பது பொதுளும்
சித்திர வடிவே திகழருங் குழகா
செங்கையி னன்கயி லுடையாய்
மத்தமு மெழிலா ரறுகும்வில் லுவமு
மதலையு மணிபவர் மழவா
பித்தனேன் குறைதீர்த் தருள்சிவ னேயென்
பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 1

கீணமில் பொருளே கிளரொளிப் பிழம்பே
கிருபைசேர் கற்பகக் காவே
மாணவர் சிரமேற் கரங்களைக் குவித்து
வணங்கிட வருசிவக் கொழுந்தே
ஆணவங் குடிகொண் டருடனை மறந்திங்
கனுதின மனுசிதஞ் செறியப்
பேணிய கொடியே னின்சரண் புகுந்தேன்
பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 2

பத்தருக் கேமம் பொழியருட் குயினே
பரமமெய்ஞ் ஞானிக ளுளத்தே
நித்தலும் ருசிக்குஞ் சருக்கரைக் குவடே
நேயமா லயன்முத லோர்தாம்
சித்தசன் னதமே கொளப்பொறி யிசைத்த
செம்மலே யெங்குல வாழ்வே
பெத்தனே னுன்சே யானதா லினியென்
பிழைபொறுத்தாள்வதுன் கடனே. 3

கன்னலே யிழுதே கற்கண்டே தேனே
கனிந்தமுக் கனிரச மேயின்
மன்னய விளைவே யமுதமே யொழியா
மதுரமே சீனிச்சக் கரையே

என்னுளத் தியங்கு மிறையெனுங் குருவே
    யெந்தையே திருத்துணை கிடைத்த
பின்னுநிற் கேற்காப் பிசிதனை நவின்றேன்
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 4

பங்கய னரன்மால் பண்ணவ ரிமவான்
    பந்தனை யேனை மூர்த் திகளும்
கங்குலும் பகலும் வினோத வைம் பூத
    கருமமு முனையன்றி யுண்டோ
எங்களுக் கயலோர் புரிபுகர் பொறுப்ப
    தெங்களு ளுண்டது பொருவப்
பிங்கல வயிலோய் பரிக்கை பண் ணாதென்
    பிழை பொறுத் தாள்வதுன் கடனே. 5

மாலயற் கரிய வரையெனத் திமிர்ந்த
    மதிக்கிடைத் தாணுவுக் காதி
நூலின்முன் மூல நொடித்தகத் தியற்கு
    நுவன்றநற் பரமபுங் கவனே
வேலினுக் கிறையே குறத்திதன் றுரையே
    வினயவிண் ணவர்கள்பண் ணவனே
பீலியி லிவருஞ் சிவபெரு மானே
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 6

வீசிடு துளக்க ஞெகிழியந் தாளா
    விண்குடி யேற்றிய வீரா
தாசர்வெம் பவத்துட் டிளைத்திடா வண்ணந்
    தடைபுரிந் தாளரு ளாளா
ஆசைகொள் பாழ்த்த நினைப்பினுள் ளயர்வே
    னதிகமு மேழையே முனிந்து
பேசிய நீதா னெனைக்கைவி டாதென்
    பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 7

அடியவர்க் கெளியா னென்றுனை முதுநூ
லனைத்துநன் கெடுத்தெடுத் ததிர்த்த
படியெனை யொருதொண் டாயெண்ணி யிதுநாள்
பணித்ததி னில்லெனச் சொனதால்
கொடியவ னெனினுந் தவக்கமில் லாமற்
கூடுவ னுன்னருட் பவுள்சைப்
பிடிதவ றாதோர் நிலைகொள்ள வேயென்
பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 8

துள்ளுமா மயின்மீ தேறுவிண் ணவனே
தொழுமடி யார்கள்பி ரானே
கள்ளையார் கழுநீர்த் தொடையிறை நாயேன்
கருத்தைவிட் டகலாக் கருத்தே
பிள்ளைசெய் யடக்கோ தனைத்தையும் பொறுமைப்
பிதாசமித் தணைப்பது கடுப்பப்
பிள்ளையென் றுனக்கே யடைக்கல மாமென்
பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 9

நேசமுற் றோர்பா னிறையுநல் லறிவே
நினைவினி லெழுந்தொளிர் சுடரே
மாசினல் லருணா சலத்தவ னிறையே
மலரடி பணிகும ரகுரு
தாசனைக் காப்போ னானெனுந் தேவே
சரவண பவசிவ குகனே
பேசிய பேச்சா னானிங னிழைத்த
பிழைபொறுத் தாள்வதுன் கடனே. 10

# தகராலயரகசியம்

## தோத்திரவியல்

நன்றென மைந்தனு வந்துப ரிந்தர நந்தன கந்தகுகா
மன்றமி குங்குழ லஞ்சுர குஞ்சர மங்கைம ணந்தமனா
என்றன ரும்பர சங்கர புங்கவ வெங்குநி றைந்தவணா
இன்றென ரந்தையொ டுங்குவணம்புரி யென்றுப ணிந்தனனே.1

மாபல தேவர்கடேவம னோலய வாழ்வுடை யார் முதல்வா
நீபந றாவணி மார்பவ னாரத நீதிப ராகுமரா
பாபவி நாசந டேசகு கேசுர பாலவி லோசனமா
தாபமு ளேனுனை யேகதி யாயடை சார்புள னாளுதியால். 2

சேலன கோவார்வேலன தோளார் சிவைசேயா
மாலன மாலா ரோதிமொய் கானார் மகணேயா
மூலப ரேசா சீலந டேசா முருகாமா
சாலவி னோதா வாளுடை யாய்தா டரவாவா. 3

சூரச மாரா வாரக ராவார் சுகராயா
நாரசு ரேசா வீரகுமாரா நடராயா
ஈரவி ராமா மாமயி லாவே சிடரேறாத்
தாரவி சாகா காநனி காவா சகமீதே. 4

பீடார் நால்வே தாதி தாசோ பிதசோதீ
தாடா தாடா தாதா வேயா ளெனவாடார்
கூடா வாழ்வா வாடா நாடா குகதேவா
ஏடா வாடா வீடீ வோநா மெனவாடே. 5

நாதநி லைக்குயர் வுளக ணலங்கிளர்மெய்ப்
போதவெ ளிக்குண லசைவு பொருந்தவிடு
பாதமெ னக்கருண் முனிவர் பணிந்தறியென்
பேதம றுத்திட வுரிய பெருங்குகனே. 6

உயிரொடு சித்துந லுடலு மொருங்குறநின்
றயர்பர நிட்டையி லொளிரு மரும்பொருளே
செயிரறு சிற்கக னமது திருந்துநடங்
கயமுற நித்தலு மிடுகு கவந்தருளே. 7

தேனினு மின்புறு மினிமை சிறந்திடவென்
பானிகழ் கின்றபல் பனிகள் பறந்தறநின்
கோனுனுள் வந்தன னெனுரை குயின்றருள்செய்
ஞானந டம்புரி குகவெ னலம்பரமே. 8

மூடம லங்கெட வறிவு முதிர்ந்திடவென்
னோடணை யன்பர்க ணெறியை யுவந்தருளுஞ்
சேடுய ரென்குக தகர சிதம்பரமாம்
வீடெனு மம்பெரு வெளியில் விளங்கொளியே. 9

## வாழ்த்து

**வி**ழுமிய பொருளாய் நாளு மிளிர்குகக் கடவுள் வாழ்க
குழுமிய தொழும்பர் வாழ்க குருவுடன் சீடர் வாழ்க
தொழுகுலத் தவர்கள் வாழ்க துகளறு தவங்கள் வாழ்க
வழுவறு மறையு மாக மமுஞ்சொன முடிவு வாழ்க.

பன்னிரு தடந்தோ ளெந்தை பாதமென் கமலம் வாழ்க
தென்னவிர் திருவ தேவ சேனையங் குறமின் வாழ்க
மின்னயி னவிரம் வாழ்க வியனரு ணகிரி வாழ்க
பன்னருட் குரவர் வாழ்க பரிவுடைச் சீடர் வாழ்க.

# திருக்கந்தர் திருப்பல்லாண்டு

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

### பண் - பஞ்சமம்

**பொ**ன்னுயர் நாட்டிறை புத்திரி தனைமன்றல் புரிந்துசெந் தினைகாத்த
மின்னினை மாமணஞ் செய்தரு ணாடிய வித்தகர் தமையாண்டு
நன்னல நல்கருள் வேந்தென விளங்குபு நான்மறை களும்விரித்துப்
பன்னரும் பரமென விருக்குநந் தேவுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 1

**மூ**ப்பறு கட்டிள மைத்திரு மேனியு மூப்புடை யார்க்கெல்லாம்
மூப்புடை மேன்மையு மூப்புடை யாவிகண் முழுவது மூப்பிளமை
யாப்பறு மாறெமை யாள்கும ராவென நாடிறை மையுமல்கு
பாப்பணை யான்மரு மானெனும் வேலற்குப் பல்லாண்டு கூறுதுமே. 2

**நீ**ர்வள மார்பரங் குன்றிலு நீடெழி னிமிர்திருச் செந்திலிலும்
சீர்வள மார்திரு வேரகந் தன்னிலுந் தீதறு பழநியிலும்
ஏர்வள மார்திருச் சோலையங் கிரியிலு மிருந்தடி நினைவார்க்குப்
பார்வள மேல்வள நல்கருட் குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 3

**த**ணிகைகந் தாசலஞ் சமரா புரிதிருச் சயிலமி லஞ்சியறா
அணிகெழு வேள்வியங் கிரிபொதி யாசல மரிப்பா டுடுப்பைமகா
திணியகத் தேவைசெங் கோடுகுன் றக்குடி திருவுரு மலையாரூர்
பணியுயர் கூடலம் பதியுறை குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 4

**சி**த்தர்கள் காண்கதிர் காமமண் ணாமலை சீசயி லங்கயிலை
எத்தவ ரும்புகழ் மேரு சிராசல மேர்த்திரு நீற்றுமலை
உத்தம நீள்கழு கோதியெண் கண்ணெனு மொண்டலங் களின்மேவிப்
பத்தருக் கருள்புரி கின்றசெவ் வேளுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 5

**நே**சர்கள் வாழெழின் மயிலவொண் மாதிர நீர்மலி பெரும்பேறு
கோசரர் சூழ்கந்த கோட்டங் குமாரவொண் கோட்டநல் வேற்காடு
மாசில்கு மாரபு ரம்பெரு வயலிரு கொடுமளூர் வதிந்தடியார்
பாசறை தீர்த்தருள் புரிமுரு கோனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 6

**து**ப்புறு பூண்டிபுள் வேணகர் வேனகர் தூயவர் புகழாண்டார்
குப்பமி றாதபொ னம்பல மெனவே குயினில யங்களிலும்
ஒப்பக நாடுகள் காடுகள் கீழ்மே லுலகுயிர்த் திரள்களிலும்
பப்புவர் மீக்கூ றிடநிறை குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 7

**க**ட்சியி லேபடுத் துத்துயில் கொண்டிருட் காரியி னுங்கொடிய
அட்சிகண் மோகன மாழ்ந்துள வாயுளை யவம்பணி யவியாமல்
வெட்சியுங் கோடையு மணிதிரு மொய்ம்புகள் விளங்கிட மென்றூவிப்
பட்சியில் வருமுரு கோனெனு மாதிக்குப் பல்லாண்டு கூறுதுமே. 8

**எ**ண்ணுந ரெண்ணம தோர்ந்தரு ளேந்தலு மிரவொடு பகலிறந்த
கண்ணர்கள் பின்றொடர் காதலுள் ளானுமொர் காலமு மிடர்நாசம்
நண்ணுத லில்லுயர் பெருந்திற லோனுமெஞ் ஞாலமு நினைவொன்றால்
பண்ணிடு மீசனு மாயுள்ள குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 9

**அ**ன்னையின் மேம்படு கருணையி னாற்குக னடிகளைப் புகழ்தாசன்
தன்னைமெய் யடியவ னாக்கவென் றகம்புறஞ் சார்ந்துவந் தேற்றமதி
சொன்னவ னாயனு பூதிசொன் னவற்குறு சூரறுத் தெவராலும்
பன்னவொ ணாநல நல்கிய குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 10

# கட்டியம்

**ரா**ஜாதி ராஜ ராஜ பரமேச்வர குமார பகவானுக்கு ஜய
தேவாதி தேவ தேவ பரமேச்வரசிவஸுப்ரஹ்மண்யனுக்கு ஜய
ஸ்ரீவல்லி தேவசேனா சமேத சர்வ சுப லக்ஷணனுக்கு ஜய
ஞான சக்திதர ஞானப்பிரகாச சுவாமிக்கு ஜய
குக்குடத் துவஜ ஹஸ்த வஜ்ர பாணிக்கு ஜய
மயூரவாகன மகாகிருபாநிதிக்கு ஜய
அருணகிரிநாத ஆனந்த பராபரனுக்கு ஜய
மஹாதேஜோ மண்டலத்தாரைக் காத்தருள் கடவுளுக்கு ஜய
பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளுக்கு ஜய.

திருச்சிற்றம்பலம்

## திருவலங்கற்றிரட்டு

### (அடைக்கலம்)

**து**ங்க வார ணங்கச் சையாச் சூடி யேமப்
பொடிதி மிர்ந்தை
அங்க மாக யோக தண்ட மான தொன்று
கரம்பி டித்துச்
செங்க மேய சிறிய சிக்கந் திகழ நின்ற பழநிச் சித்தா
சங்கை வீட்டுன் னடிப்பண் போதுந் தாச னானின்
னடைக்க லம்மே. 4

**கு**ம்ப யோனி வரைக ளிங்குக் கொணர்தி யென்ற
படிகொ ணர்ந்த
வம்ப றாவு மாவி டும்பன் வாழ வேநல் லடிமை கொண்டோய்
நம்பி ரானென் றேத்த விந்நா ணாயி னேற்குங் கிருபை
செய்தோய்
தம்பி ரானின் னடிப்பண் போதுந் தாச னானின்
னடைக்க லம்மே. 6

---

**மு**ண்டிதமில் சிறுசிகையு மிடையிலணி கவுசனையு
முழுமதிய மெனமிளிரு முகமுமொருகைத்
தண்டுமுர முறுபுரியு மிளமையுடை யுருவுமெழி
றரவிலக விருடிசுர ரடிகளெவரும்
கண்டுநல னடையவென வமிர்தமழை பொழிபெரிய
கருவிகவி பழநிமலை யுறைபெரியவன்
தொண்டனென வுளவெனது மனதிலுள னிரவுபக
றுணையுமவ னணைவுமவ னினைவுமவனே.

*– முதல் மண்டலம்*